Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

குடும்பத் தலைவிகளுக்கு ஓர் செய்தி
ஊறுகாய் வகைகள், அனைத்து தானிய மா வகைகள், அயடீன் கலந்த உப்பு, ரசப் பவுடர், திடீர் தோசைமா, அப்பக்கலவை, பேக்கிங்பவுடர் இன்னும் பல நீங்கள் பெற்றிட
M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான
முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
777 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். Phone : 222 7894

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 08 (23.10.2004) சனிக்கிழமை இதழ்: 23

## இலங்கை விவகாரத்தில் அமெரிக்கத் தலையீடு அதிகரிக்கின்றது

# பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த றிச்சட் ஆர்மிரேஜ் அடுத்தமாதம் வருகிறார்!



(கொழும்பு)

**தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இவரது விஜயம் இடம்பெறுமெனவும், இதன்போது இவர் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்றபின்னர் கொழும்புக்கு வரவுள்ளதாக அமெரிக்க வெளியுறவுச் செயலகம் அறிவித்துள்ளது.

கொழும்புவரும் இவர் - ஜனாதிபதி சந்திரிகாவுடன, விடுதலைப் புலிகளுடன் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகக் கொழும்புத் தூதரகம் தெரிவித்தது.

அடுத்த மாதம் ஆர்மிரேஜ் வருவதை உறுதிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் அகாஷி இலங்கைக்கு விஜயம்!

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கான ஜப்பானிய அரசின் விசேட தூதுவர் ஜசுஷி அகாஷி எதிர்வரும் வாரத்தில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும் முகமாகவே யசுஷி அகாஷி எதிர்வரும் 27ஆம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு

# நிரந்தரமான தீர்வினைக் காண்பதற்கு கட்சிகளிடம் இணக்கப்பாடு இல்லை!

## சுவீடன் வெளியுறவுச் செயலர் கவலை

(ஸ்ரொக்ஹோம்)

இலங்கை இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியற்தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இலங்கையில் உள்ள அனைத்து அரசியற் கட்சிகளும் பொது உடன் பாடு ஒன்றிற்கு வராமை கவலையளிப்பதாக சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சின் இராஜாங்க செயலாளர் அனித்தா டயறிக் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுவீடனின் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அனைத்து அரசியற் கட்சிகளும் ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவது அவசியம்.

அத்துடன், இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசாங்கத்திற்கு சுவீடன் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும். வடக்கு - கிழக்கினைப் புனரமைப்பதற்கு சுவீடன் அரசு மனிதாபிமான உதவிகளையும் வழங்கும் என்றும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் -

தமிழ் மக்களது பொறுப்பு வாய்ந்த விடுதலை அமைப்பு என்றவகையில் சமாதான நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இதய சுத்தியுடன் ஈடுபடுவதை மீண்டும சர்வதேசத்துக்கு வலியுறுத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.



நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் ஆரம்பித்துள்ள கையெழுத்துப் போராட்டம்....!


## பாதுகாப்பு நிலைமைகளை ஆராய

# அமெரிக்க பசுபிக் படைத் தளபதி இலங்கைக்கு இரகசிய விஜயம்!

## ஒரு வார காலம் தங்கியிருந்தார்

(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய இராணுவக் கட்டளைப் பீடத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஒருவாரகால விஜயத்தை இலங்கையில் மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.



அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியத்துக்கான கட்டளைப் பீடத்தின் திட்டமிடல் இயக்குனரான ஜெனரல் கார்ல் டபிள்யூ எயிட்கன் பெரியே கடந்த ஒருவார காலமாக இலங்கையில் தங்கியிருந்து நிலைமைகளை மதிப்பிட்டுச் சென்றிருக்கிறார்.

இவரது இந்த விஜயம் குறித்து அமெரிக்கத் தூதரகமோ, பசுபிக் பிராந்திய கட்டளைப்பீடமோ தகவல் எதையும் வெளியிடாமல் வைத்திருந்த அதேவேளை, இலங்கை அரசும் இது குறித்து எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே மூலமாக கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்தும் நடைபெற்றே வருகின்றது!

## ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கள் நின்றுபோயிருந்தாலும், நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக - பேச்சுக்கள் ஆரம்பிக்கும்போது என்னென்ன விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்பது குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் தொடர்கின்றன என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில் -

அரசு - புலிகளின் பிரேரணைகளை தீவிரமாகக் கவனமாகப் பரிசீலித்திருக்கிறது என்றுதான் நினைக்கின்றேன். அரசின் அரசியல் சட்டவிவகார அமைச்சு மற்றும் மூத்த வழக்கறிஞர்களின் ஆய்வுக்குப் பிறகு புலிகளின் இடைக்கால நிர்வாகத்திட்டம் குறித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவை அரசின் கருத்துக்கள் என்றுதான் கூறவேண்டும். இவை அரசின் மாற்றுத்திட்டங்கள் அல்ல. அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்களுடன் நான் முரண்படவில்லை. அவரது வார்த்தைகள் என்னவாக இருந்தாலும் சாராம்சம் இதுதான். இது புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டத்துக்கு அரசின் உட்கட்டமைப்பில் இருந்துவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டு செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலைமட்ட கணிப்பீட்டு செயலமர்வுகள் இன்றும், நாளை மறுதினமும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், நளை வரணி மத்திய ஆசிரியர் நிலையத்திலும் இடம்பெறவுள்ளது.

பாடசாலை வகை I ஏபி, Iசி பாடசாலைகளிலிருந்து பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், பிரதான ஆசிரியர்கள் என 6 பேரும் -

வகை II பாடசாலையில் இருந்து தலா மூன்று ஆசிரியர்களையும் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் க.பொ.த உயர்தர வகுப்பு பாடசாலை மட்ட கணிப்பீட்டுச் செயலமர்வு எதிர்வரும் 28ம் திகதி வரணி ஆசிரியர் மத்திய நிலையத்திலும் நடைபெறவுள்ளது. பாடசாலை வகை 1ஏபி, 1சி தரத்தை சேர்ந்த பாடசாலையில் இருந்து தலா 3 ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (29)

## "தந்தை செல்வா" நூல் வெளியீட்டுவிழா

(கொழும்பு)

லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் "தந்தை செல்வா" நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெக்டோன் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தா - நூலினை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை பாவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்வார்.

நூலின் ஆய்வுரையை கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் ஆற்றுவார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான தி. மகேஸ்வரன், மாவை.சேனாதிராசா, அனைத்திலங்கை இந்துமாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன், வீரகேசரி இணை ஆசிரியர் வி. தேவராஜ், வி.ஏ.திருஞானசுந்தரம், வாசுதேவநாணயக்கார ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

தந்தை செல்வாவின் அரசியலில் இணைந்து செயற்பட்டு வந்த ஐ.தி. சம்பந்தன், வே.செ.குணரத்தினம் ஆகியோர் இணைந்து இந்த நூலினை எழுதி வெளியிடவுள்ளனர்.

## கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை!

### சாவகச்சேரி நகரசபை செயலாளர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதிகளில் நடமாடும் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும், அவ்வாறு கட்டி வளர்க்காது கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் திருமதி.கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர் மற்றும் அதனை அண்டிய ஏனைய பிரதேசங்களில் கடந்த கால யுத்த நடவடிக்கையினால் இந்தப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கைவிட்டுச் சென்ற கால்நடைகள் உரிமை கோரப்படாது வீதிகளிலும், நகரின் மையப்பகுதிகளிலும் நடமாடி வருகின்றன. இதனால், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், விவசாய நிலங்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

அத்துடன் தற்பொழுது கால்நடைகளை வளர்ப்போர் கட்டி வளர்க்காது வீதிகளில் விட்டுள்ளதால், இவற்றினால் பாதிப்புகள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் மேற்படி அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கு சாவகச்சேரி நகரசபை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

கால்நடைகள் கட்டி வளர்க்காது விடப்படுமாயின் அவற்றினை பிடித்து ஏலத்தில் விற்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (29)



சாவகச்சேரி கிழக்கு சமுர்த்தி வங்கி - தமது பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் - யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்றினை வழங்குவதைக் காணலாம்.

## யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி!

### ஐந்து தினங்கள் நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் தனது முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை விஞ்ஞானக் கண்காட்சியொன்றை நடாத்தவுள்ளது.

இந்தக் கண் காட்சி க.பொ.த. (உ/த), க. பொ.த (சா/த) மாணவர்களின் அறிவு விருத்தியைப் பிரதான குறிக் கோளாகக்கொண்டது. இது காரணமாக 26ம் திகதி முதல் 29 திகதி வரையான நான்கு தினங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 30 ஆம் திகதி பொது மக்கள் பார்வைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தினமும் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பார்வையாளர்கள் கண்காட்சி மண்ட பங்களுள் அனுமதிக்கப்படுவர். மு.ப. 9.00 முதல் பி.ப. 6.00 மணிவரை கண்காட்சியைப் பார்வையிட முடியும்.

இந்தக்கண்காட்சி பாடசாலை மாணவர்களின் செயன்முறைப் பாடத்திட்டத்துக்கு அமைவாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப ஆர்வலர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், கணினி விஞ்ஞானம், கணித-புள்ளிவிபரவியல், மீன்பிடியியல் ஆகிய துறைகள் சார்ந்த கண்காட்சிப் பொருட்களும், செயன் முறைகளும் காண்பிக்கப்பட்டு விளககமளிக்கப்படவுள்ளது.

இந்தக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் தமது மாணவர்களை அழைத்துவரவிருப்பதாக முற்கூட்டியே பதிவுசெய்து தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளன. வெளிமாவட்டங்களிலிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் வருகைதரவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தவிஞ்ஞான கண்காட்சி விஞ்ஞான பீடத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வாக நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஏடு தொடக்குதல்

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் நவராத்திரி விழாவின் வாணிவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இன்று காலை 10 மணிக்கு சிறுவர்களுக்கான ஏடு தொடக்குதல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (82)

### நவராத்திரி விழா

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்தும் நவராத்திரி விழா இன்று காலை 10.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் சி. ஆனந்தராஜா தலைமையில் மத்திய பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில், சிறுவர்களுக்கான ஏடு தொடக்குதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (82)

### பரிசளிப்பு விழா

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் அதிபர் திருமதி.வி.சுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் - பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கணக்காளர் வே.நடராசா கலந்துகொள்ளவுள்ளார்.

இதில், இந்த ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவானவர்களுக்கும், க.பொ.த (சா/த) பரீட்சையில் அதிகூடிய பெறுபேறு பெற்றவர்களுக்கும், கணிப்பீட்டில் உயர்புள்ளி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (12)

### அதிபர்களுக்கான வதிவிடப் பயிற்சி

முகாமைத்துவ வதிவிடப் பயிற்சி நெறியில் இதுவரை கலந்து கொள்ளாத அதிபர்களின் நன்மை கருதி நாளை முதல் முதலாம் திகதி வரை இராமநாதன் கல்லூரியில் ஒன்பது நாட்கள் அதிபர்களுக்கான வதிவிடப்பயிற்சிநடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியில் பங்குபற்றும் அதிபர்களுக்கான கடிதங்கள் வலயக கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிபர்கள் இன்று மாலை 5.00 மணிக்கு உரிய இடத்தில் சமுகமளித்து பயிற்சி நெறியில் தவறாது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)

### 25 ஆவது ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

விக்னா கல்வி நிறுவனத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விக்னா கல்வி நிறுவன இயக்குநர் லயன்.எம்.ஜெயந்திக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - திரு.திருமதி.குணராஜா தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

### பண்ணையாளர் போட்டியில் தெரிவானோர் விபரம்

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களின் விவசாய பண்ணையாளர்களுக்கு இடையே சுகாதார (கால்நடை உற்பத்தி) திணைக்களத்தினால் சிறந்த பண்ணையாளரை தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

*ஆடுவளர்ப்பு*

1ம் இடம் - கே.வி.கதிர்காமு - புலோலி, 2ம் இடம் - வி.கேசவபாலன் - நாகர்கோயில், 3ம் இடம் ஆர்.யோகேஸ்வரி - புலோலி தெற்கு.

*மாடுவளர்ப்பு*

1ம் இடம் பி.சிவரூபன் - வல்வெட்டித்துறை, 2ம் இடம் - ரி.சண்முகநாதன் - புலோலி வடக்கு, 3ம் இடம் - எஸ்.யேசுநேசன் - நாகர் கோயில்.

*கோழிவளர்ப்பு*

1ம் இடம் - எஸ்.ஜனார்த்தனன் -தும்பளை, 2ம் இடம் - கே.இராஜ்குமார் - குடத்தனை, 3ம் இடம்- கே.தயாளசாந்தா - அம்பன். (122)

## ஆசிரியர்களுக்கான முத்தமிழ் வகுப்புகள் டிசம்பர் முதலாம் திகதி வரை தொடரும்!

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்விப் பேரவையினரால் வலயமட்டத்திலுள்ள பாடசாலைகளின் தமிழ் ஆரிசிரியர்களுக்கென நடத்தப்பட்டுவரும் முத்தமிழ் வகுப்புக்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்.வலயத்திலுள்ள 5 கோட்டங்களைச் சேர்ந்த தமிழாசிரியர்களுக்கான இந்த முத்தமிழ் வகுப்பில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த முத்தமிழர் அறிஞர்கள் கலந்து பயிற்சியளித்து வருகின்றனர். இதன்படி தற்போது நாடகப்பயிற்சி வகுப்புக்களும், செயன்முறை வகுப்புக்களும் முடியும் நிலையில் உள்ளன. இசைப் பயிற்சி வகுப்புக்கள் யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல சங்கீத வித்துவான்களைக் கொண்டு நடாத்தப்படவுள்ளதாக யாழ். கல்விப்பேரவையினர் தெரிவித்தனர்.

இந்த முத்தமிழ் பயிற்சிவகுப்பு பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டாலும் நல்ல பலனை அளித்திருப்பதாகவும், இதனைத் தொடர்ந்து மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை ஊக்குவிக்கக்கூடிய வகையில் பாடசாலை அதிபர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புகளை நடாத்த தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

### நிறுவுநர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும்

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நிறுவுநர் தினவிழாவும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில் - நிறுவுநர்தின நினைவுப் பேருரையினை கனகரத்தின மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் எம்.பி.அருளானந்தன் நிகழ்த்துவார்.

### புத்தூர் முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா

புத்தூர் கிழக்கு மத்திய சன சமூக நிலைய, முன்பள்ளி புதிய கட்டடத்திறப்புவிழா புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையத்தினதும், முன்பள்ளியினதும் புதிய கட்டடத்தில் - நிலையத் தலைவர் நா.காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த யுத்தகாலத்தில் முற்று முழுதாக தரைமட்டமாக்கப்பட்டு, சேதமாக்கப்பட்டிருந்த இந்த நிலையம் ஜி.ரி.இசட் நிறுவனத்தி னதும், வலிகிழக்குப் பிரதேச சபை யினது உதவியினாலும் அமைக்கப் பட்டது.

வலி.கிழக் குப் பிரதேசசபையின், புத்தூர் உப. அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ். ஜெயகாந்த் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். (110)


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அரசரத்தினம் ஜெயக்குமார் என்பவரது அடையாள அட்டையும் (78287386V), சாரதி அனுமதிப் பத்திரமும் (DL No - A007 105661) உடுப்பிட்டிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையிலுள்ள கம்பர்மலை வீதியில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு அலுவலகத்திலோ அல்லது பத்தினி அம்மன் கோயில், வல்வெட்டி T.P : 071 2228392 என்னும் முகவரியிலோ ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல் : அ.ஜெயக்குமார். (967)

நிறைஞ்சனாஸ் சங்கானை




தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான




காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G ரெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# விடுதலைப் புலிகளிடம் சேர்ப்பிப்பதாகக் கூறியே காட்டிலிருந்து வீரப்பன் அழைத்து வரப்பட்டார்!

## பொலிஸ் அதிகாரி திடுக்கிடும் தகவல்




(சென்னை)

**இரகசியமான முறையில் இலங்கைக்கு அழைத்துச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளி டம் சேர்த்து விடுவதாகக் கூறியே, அதிரடிப்படையினர் வீரப்பனை அழைத்து வந்ததாகத் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் - சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கவுடா, சேதுமணி ஆகியோர் கடந்த 18 ஆம் திகதி தர்மபுரி அருகே சுட்டுக் கொல்லப்பட்டனர். இடது கண்பார்வை இழந்த வீரப்பனுக்கு, சேலம் மருத்து வமனையில் சிகிச்சை அளிப்பதாக நாடக மாடி அவரை அம்புலன்சில் வரவழைத்து சுட்டுக் கொன்றதாக அதிரடிப்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**

எனினும், கண்பார்வை இழப்புக்குச் சிகிச்சை பெறத்தான் வீரப்பன் காட்டுப் பகுதியை விட்டு வெளியே வந்தார் என்ற





வெள்ளைத்துரை

அதிரடிப்படையினரின் பொய்யான தகவல் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. கண் அறுவைச் சிகிசசை பெறவிரும்பிய வீரப்பன் -தன்னுடன் எதற்காக 3 கூட்டாளிகளையும் அழைத்து வந்தார், அம்புலன்சில் 3.50 லட்சம் ரூபா பணம் மற்றும் நவீன ஆயுதங்களை எடுத்து வந்தது ஏன் என்ற கேள்விகள் எழுந்தன.

இதற்கு விடை காணும் வகையில் தமிழக அதிரடிப்படை பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டபோதே இந்தத் திடுக்கிடும் தகவலை அவர்கள் வெளி யிட்டனர். கண் சத்திரசிகிச்சை செய்வதாகக் கூறி, வீரப்பனை அழைத்துவரவில்லை. இலங்கைக்குத் தப்பிச் சென்று விடலாம் என நம்ப வைத்தே அவரையும், கூட்டாளிகளையும் வெளியே கொண்டு வந்தோம் என்றனர்.

வீரப்பனைக் காட்டுப் பகுதியிலிருந்து வெளியே கொண்டு வந்து தீர்த்துக் கட்டத் திட்டமிட்ட அதிரடிப்படையினர், அதற்கு இரண்டு விதமான தந்திரங்களைக் கையாண்டனர். ஒன்று - கண்ணுக்குச் சத்திரசிகிச்சை செய்யச் செல்லலாம் என்பது. மற்றொன்று இலங்கைக்குத் தப்பிச் சென்றுவிடலாம் என்பது. இதில், முதல் தந்திரம் கடந்த 2 மாதங்களுக்கு முன் கையாளப்பட்டது. வீரப்பனுடன் நெருங்கிய நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் பலமுறை ரகசியமாக வீரப்பனைச் சந்தித்து ஆலோசனை கூறியும், வீரப்பன் காட்டுக்குள் இருந்து வெளியேவர மறுத்துவிட்டான். இதனால், 2 ஆவது தந்திரத்தை அதிரடிப்படை கையாண்டது. கடந்த மாதம் முதல் வாரத்தில் வீரப்பனுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ள நபரை அதிரடிப் படையினர் பிடித்தனர். அவரிடம் 'பட்டுப் பூச்சிக் கூடு' ஆபரேஷன் திட்டம் குறித்து விளக்கப்பட்டு, பெருந்தொகை ஒன்றும் கொடுப்பதாக அதிரடிப்படைத் தரப்பில் உறுதி கூறப்பட்டது. இதையடுத்து, அந்த நபர் வீரப்பனைக் காட்டுக்குள் இருந்து வெளியே அழைத்துவர உதவுவதாக உறுதியளித்தார்.

இதையடுத்து, வீரப்பன் கும்பலை வீழ்த்துவதற்கான உத்திகள் தயாரிக்கப்பட்டன. பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் வெள்ளத்துரையை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக மாற்றி, வீரப்பனைச் சந்திக்க அனுப்பிவைப்பது. அவர் வீரப்பனைச் சந்தித்து இலங்கைக்குத் தப்பிச்சென்றுவிட ஏற்பாடு செய்திருப்பது குறித்த தகவல்களை வீரப்பனிடம் தெரி வித்து, வெளியே அழைத்து வருவது என்பதுதான் அந்தத் திட்டம். இதன்படி, வெள்ளைத்துரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக மாறினார். இலங்கைத் தமிழர்கள் பேசும் மொழி நடையையும் அவர் குறுகிய நாட்களில் கற்றுக்கொண்டார். பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரிலான கடிதம் மற்றும் சில புலிகள் தொடர்பான புகைப் படங்களையும் எடுத்துக்கொண்டு, காட்டுக்குள் சென்றார். அவருடன் வீரப்பனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபரும் சென்றார்.

வீரப்பனைச் சந்தித்த வெள்ளைத்துரை தன்னை விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்திருப்பதாகவும், உங்களை இலங்கைக்குப் பாதுகாப்பாக அழைத்துவர புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கட்டளையிட்டுள்ளார் என்றும் தெரிவித்தார். ஆரம்பத்தில் வீரப்பன் இதை நம்ப மறுத்தார். அப்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரிலான கடிதம் மற்றும் சில ஆவணங்களையும், புகைப்படங்களையும் அவர் காட்டியுள்ளார். இவரது பேச்சில் நம்பிக்கையடைந்த வீரப்பன், காட்டிலிருந்து எப்படித் தப்பிச் செல்வது, எந்த வழியாக இலங்கைக்குச் செல்வது, எத்தனை ரூபா செலவாகும் என அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுள்ளார்.

நீங்கள் மட்டுமல்ல, உங்களுடன் இருப்பவர்களும் என்னுடன் வந்துவிடலாம். தர்மபுரி பென்னாகரத்தில் இருந்து அம்புலன்ஸ் மூலம் உங்களைச் சேலம் வரைக்கும் அழைத்துச் செல்கிறேன். அங்கிருந்து தனியான கார் மூலம் இராமேஸ்வரம் சென்று, படகில் ஏறி இலங்கைக்குத் தப்பிவிடலாம். இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தயார் நிலையிலுள்ளன. அதற்கு நீங்கள் 3 லட்சம் ரூபா கொடுத்தால் போதும் என்றுள்ளார். அதிரடிப்படையின் தந்திர வலையில் விழ முதல் காலடி எடுத்து வைத்த வீரப்பன், எந்த நாளில் எங்கிருந்து தப்பிச்செல்வது என்ற திகதியையும் அவரே குறித்தார். கடந்த 18 ஆம் திகதி இரவு 10 மணிக்கு தர்மபுரி, பென்னாகரம் காட்டுப் பகுதியில் இருந்து வெளியே வந்து அம்புலன்ஸில் ஏறிக்கொள்கிறோம் எனவும் உறுதியளித்தார்.

இலங்கை தப்பிச்செல்ல வீரப்பன் ஒப்புக் கொண்ட தகவல் கிடைத்ததும் உஷாரடைந்தது அதிரடிப்படை. பென்னாகரத்தில் இருந்து தர்மபுரி செல்லும் வழியில் வீரப்பன் கும்பல் பயணம் செய்யும் அம்புலன்ஸை எந்த இடத்தில் மடக்கித் தாக்குதல் நடத்துவது யார், யாரெல்லாம் நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது குறித்த நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போது, பாடிகிராமம் அருகேயுள்ள 'செவன்த் டே மெட்ரிகுலேஷன் பள்ளி' கட்டடம் அருகில் தாக்குதல் நடத்துவது என அதிரடிப்படை முடிவு செய்தது. அதற்கான ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருந்தன.

கடந்த 18 ஆம் திகதி திட்டமிட்ட வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகள் 3 பேரும் பென்னாகரம் காட்டில் இருந்து, இரவு 10.15 மணிக்கு வெளியேறி, அங்கு தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த அம்புலன்ஸ் வானில் ஏறிக்கொண்டனர்.

ஏற்கனவே, திட்டமிட்டபடி அம்புலன்ஸ் தர்மபுரி அருகே பாடி கிரா மத்தை அடைந்து 'தாக்குதல்' இடத்தைத் தொட்டது. குறுக்கே கரும்பு ஏற்றிய வந்த லொறியைத் திருப்புவதுபோல் நடித்து, அம் புலன்ஸ் வானைச் சாதாரண உடையில் இருந்த அதிரடிப் படையினர் மறித்தனர். அப்போது, வானை ஓட்டிவந்த சாரதியான சரவணன், வீரப்பன் கும்பல் எதிர்பாராத நேரத்தில் அம்புலன்ஸின் திறப்பை எடுத்துக்கொண்டு திடீரென அங்கிருந்து தப்பியோடினார்.

அதே நேரத்தில் பின்னால் வந்துநின்ற லொறி, அம்புலன்ஸ் மீது முகப்பு விளக்கின் வெளிச்சத்தைப் பாய்ச்ச, சுற்றுப் புறங்களில் பதுங்கியிருந்த அதிரடிப்படையினர் நவீன ரகத் துப்பாக்கிகளுடன் ஆவேசமாக எழுந்தனர். நொடி நேரத்தில் 'பட்டுக்கூடு நடவடிக்கை' முடிவுக்கு வந்தது. அம்புலன்ஸிலிருந்த வீரப்பன் உட்பட 4 பேரும் அதிரடிப் படையால் சரமாரியாகச் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

'கண் சத்திர சிகிச்சை செய்ய உதவுவதாகக் கூறி, வீரப்பனைக் காட்டிலிருந்து வெளியே அழைத்துவந்தோம்' என முதலில் அறி வித்தது ஏன? அதிரடிப்படை உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ரகசிய நடவடிக்கைகளின் நோக்கம் மற்றும் உத்திகள், ரகசியங்களை அப்படியே வெளியிட்டால், சில விளைவுகள் ஏற்படும். அதனால்தான் அவ்வாறு தெரிவித்தோம் என்றார்.

# ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பாரிய ஊழல்களில் ஈடுபட்டது

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பாரிய ஊழல்களில் ஈடுபட்டு வந்ததாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகராகச் செயற்படும், ஜேம்ஸ் ரொபட்சனுக்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வருடமொன்றுக்கு 214 ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் சம்பளமாக வழங்கியுளளது.

இதேவேளை ஜோன் ஏல் என்ற வெளிநாட்டவர் ஆடைத் தெரிவு மற்றும் பேச்சுப் பயிற்சி என்பவற்றுக்காக மாதமொன்றுக்கு 19 ஆயிரத்து 940 அமெரிக்க டொலர்களை அன்றைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடமிருந்து பெற்று வந்ததாகவும், இவர்கள் தங்குவதற்கு ஆடம்பர மாளிகைகள் மற்றும் போக்கு வரத்துக்கு சொகுசு வாகனங்கள் என்பனவும் அரசாங்கத்தின் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், இவர்கள் தமது சொந்த நாடுகளுக்குச் சென்று வருவதற்கான விமானப் பயண ஒழுங்குகளை அரசாங்கமே மேற்கொண்டதாகவும், வருடம் ஒன்றுக்கு இவர்கள் 7 அல்லது 8 தடவைகள் தமது சொந்த நாடுகளுக்குச் சென்றுவந்ததாகவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரி வித்தார்.

# வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 19 இல் சமர்ப்பிப்பு

## தொடர்ந்து 7 நாட்கள் விவாதம்

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம் நவம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 7 நாட்கள் நடைபெறும். இரண்டாம் வாசிப்பின் மீதான வாக் கெடுப்பு 27 ஆம் திகதி நடைபெறும்.

வரவு - செலவுத் திட்டம் நவம் பர் 18 ஆம் திகதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 20 ஆம் திகதி சனிக்கிழமையும், 27 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம்பெறும்.

இதன் மீதான விவாதம் காலை 9.30 மணிமுதல் 12.30 வரையும் பின்னர் 1 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் இடம்பெறும். சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் 6.30 மணிவரை இடம்பெறும்.

# வட -கிழக்கைப்பிரிப்பதற்கு கையொப்பம் திரட்டும் ஜாதிக ஹெல உறுமய


வடக்கு - கிழக்கு மகாணங் களைப் பிரித்து அந்தப் பிரதேச மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் எனக்கோரி ஜாதிக ஹெல உறுமய கையொப்பங்களைத் திரட்டி வருகின்றது.

இந்த கையொப்பங்களைச் சேகரிக்கும் நடவடிக்கை - புறக்கோட்டை உட்பட்ட நாட்டின் பல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

5 லட்சம் கையொப்பங்கள் உள்ளடங்கிய இந்த மனு ஜாதிக ஹெல உறுமயவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பைசலாபாத் டெஸ்ட்

# ஜெயசூரியவின் அபாரமான ஆட்டத்தில் இலங்கை அணி வலுவான நிலையில்



பைசலாபாத் நகரில் நடைபெற்றுவரும் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்பிற்கு 285 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையில் உள்ளது.


நேற்று மூன்றாவது நாளில் பாகிஸ்தான அணி 8 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்து ஆட்டத்தை ஆரம்பித்தது. சொகைப் அக்தரும், டனிஸ் கனேரியாவும் 264 ஓட்டங்களுக்குள் தமது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்ததால் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டஙகளையே பெற்றது.

பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், டில்கார பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும், வாஸ், மலிங்க, ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இலங்கை அணி நேற்றுத் தனது இரண்டாவது இனிங்ஸை விளையாட ஆரம்பித்தது. அத்துப்பத்து எந்த ஓட்டத்தையும் பெறாமல் அக்தரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்ததால் இலங்கை அணி பெரிதும் திணறியபோதும், ஜெயசூரியாவும் சங்ககாரவும் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததுடன் அணியைத் தூக்கிநிறுத்தினர்.

98 ஓட்டங்களை அணி பெற்றிருந்த போது சங்ககாரவின் விக்கெட்டை அக்தர் கைப்பற்றினார். 84 பந்துகளில் 10 பவுன்டரிகளுடன் இவர் 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதனையடுத்து ஜெயசூரியாவுக்கு ஜோடியாகக் களமிறங்கிய ஜெயவர்த்தனவும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

எனினும் மஹேல ஜெயவர்த்தன 57 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். இதேவேளை, எதிர்முனையில் இருந்த சனத் ஜெயசூரிய சதம் அடித்து



அணியைத் தூக்கிநிறுத்தினார்.

ஆட்டநேரமுடிவில் சனத் ஜெயசூரியா ஆட்டமிழக்காமல் 131 ஓட்டங்களைப் பெறறார். இதில் இவர் 19 பவுன்டரிகளுடன் இந்த ஓட்டத்தைக் குவித்தார். இவருடன் நேற்று ஆட்டநேர முடிவில் டிலான் சமரவீர 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 285 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் பொண்டிங் விளையாடமாட்டார்

இந்தியாவுக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், காயமடைந்த அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் விளையாடுவார் என்று கூறப்படுகிறது.

பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 217 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. சென்னையில் நடந்த 2 ஆவது டெஸ்ட் போட்டியின் கடைசி நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டதால் சமநிலையில் முடிந்தது. இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் எதிர்வரும் 26 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்தநிலையில், மினி உலகக் கோப்பைப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் கைவிரலில் காயமடைந்து கடந்த 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத அவுஸ்ரேலிய அணிக் கப்டன் ரிக்கிபொண்டிங் நேற்று இந்தியா வந்தார்.

ரிக்கிபொண்டிங்கின் கைவிரற் காயம் குணமடைந்து வருகிறது. அவர் நாக்பூர் டெஸ்டில் ஆடமாட்டார். மும்பையில் நவம்பர் 3 ஆம் திகதி தொடங்கும் 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் பொண்டிங் ஆடுவார் என்று தெரியவருகிறது. அடுத்த 2 ஆட்டங்களில் அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது. பிரெட்லீ இந்த தொடரில் அணியில் சேர்க்கப்படமாட்டார் என்றும் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

# இந்திய பயணத்திலிருந்து கிப்ஸ் விலகுவதற்கு முடிவு



(ஜோகனஸ்பேர்க்)

இந்தியப் பயணத்துக்கான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் இருந்து கிப்ஸ் விலகவுள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுளளது. இந்தப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது.

இந்தியப் பயணத்திலிருந்து கிப்ஸ் வலகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முனபு தென்னாபிரிக்க அணி இந்தியா வந்த போது கப்டன் குரோன்ஜே, கிப்ஸ், போயே உள்ளிட்டோர் சூதாட்டப் பிரச்சினையில் சிக்கினர். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட வீரர்க்ள் மீது டெல்கி பொலிஸ் வழக்குப் பதிவுசெய்தது.

இந்தியாவில் ஏற்பட்ட இந்தப் பிரச்சினை தொடர்பாக தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது. இதில குரேனஜே தனது தவறை ஒத்துககொண்டார். இதனால் அவருக்கு ஆயுட தண்டனை விதிக்கப்பட்டது.

கிப்ஸ் மற்றும் போயே ஆகியோருக்கு தலா 6 மாதகாலம் தடைவிதிக்கப்பட்டது. தடைமுடிந்து இரு வீரர்களும் தற்போது அணியில் இடம்பிடித்துள்ளனர். இந்த நிலையில் பழைய பிரச்சினையை டெல்கி பொலிஸ் தூசிதட்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட வீரர்கள் இந்தியா வரும் போது அவர்களிடம் நேரடியாக விசாரணை நடத்த டெல்கி பொலிஸார் முடிவு செய்திருந்தனர். முன்னதாக டெல்கி பொலிஸ் அனுப்பி வைத்த கேள்விகளுக்கு கிப்ஸ் மற்றும் போயே ஆகியோரின் பதில்கள் தூதரகம் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டது.

இருந்தாலும் வீரர்களிடம் இனி விசாரணை இருக்காது என்ற உறுதிமொழியை டெல்கி பொலிஸ் வழங்கவில்லை. எனவே, விசரணைக்குப் பயந்து இந்திய பயணத்தில் இருந்து விலக கிப்ஸ் முடிவுசெய்திருக்கிறார்.

மூத்த வீரர் கலினனை தயார் நிலையில் இருக்குமாறு தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை கேட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வுபெற்ற கலினன் இந்தியாவில் நடந்த போட்டிகளில் சிறப்பாக ஆடி ஓட்டம் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சாதித்தபோது பாராட்டியவர்கள் இப்போது பழிக்கிறார்கள்

## பாத்தீவ் குறித்து டென்டுல்கர் கருத்து



(புதுடெல்லி)

சோதனையில் இருந்து மீள பார்த்தீவுக்கு ஆதரவு தேவை என்று சச்சின் கூறியுளளார் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட்போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேல் சென்னை டெஸ்ட் போட்டியில் மோசமாகக் விக்கெட் காப்புச் செய்தார். இதனால் அவருக்கு அணியில் இடம்கொடுப்பது குறித்து பல்வேறு விவாதங்கள் ஏற்பட்டதாக கிரிக்கெட் சபைச் செயலாளர் நாயர் தெரிவித்தார். இருந்தாலும் அவருக்கு அணியில் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இளம் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் சாதித்தபோது பாராட்டியவர்கள் இப்போது பழிக்கிறார்கள். ஆனால், இந்தச் சோதனையிலிருந்து மீள அவருக்கு இப்போதுதான் அதிகமான ஆதரவு தேவை. இந்திய அணியை பல்வேறு இக்கட்டான நிலையிலிருந்து அவர் மீட்டுள்ளார்.

எனவே அவருக்கு என்னுடைய ஆதரவு எப்போதும் உண்டு என்றார். தனது காயம் குணம் அடைந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.






மட்ரிடில் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் தாய்லாந்தின் பாரடான் ஸ்ரீசாய்பன் 7-6, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்பெயினன் வீரர் அலெக்ஸ் கோரட்ஜாவை வீழ்த்தினார். வென்ற மகிழ்ச்சியில் ஸ்ரீசாய்பன்.

# நியூஸிலாந்துடனான டெஸ்ட்டில் பங்களாதேஷ் இனிங்ஸ் தோல்வி

டானியல் விக்ரோறியின் அபாரமான பந்துவீச்சினால் பங்களாதேஷுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் நான்காவது நாளிலேயே நியூஸிலாந்து அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 99 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 177 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. இதையடுத்து நியூஸிலாந்து அணி முதல் இனிங்ஸில் 402 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. நேற்று முன்தினம் மாலை ஆட்டம் நிறுத்தப்பட்ட போது பங்களாதேஷ் அணி 2 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று ஆட்டம் தொடங்கப்பட்டதுமே பங்களாதேஷ் அணி வீரர் ராஜின் காலி ஆட்டமிழந்தார். இதையடுத்து, நபீஸ் இக்பாலுடன் மொகமட் அஷ்ரபுல் இணைந்து ஓரளவுக்கு நிலைத்துநின்று ஆடமுற்பட்டனர்.

ஆயினும் அணி 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தொடக்க ஆட்டக்காரர் நபீஸ் இக்பால் 49 ஓட்டங்களுடன் விக்ரோறியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதன்பின்னர் அலோக் கபாலி களமிறங்கியபோதும், எந்த ஓட்டங்களையும் பெறமுடியாமல் ஆட்டமிழக்க நேரிட்டது. அடுத்து வந்த காலித் மசூத்தும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றதால் மந்தரல் இஸ்லாம் ரானா களமிறக்கப்பட்டார்.

அவரும் ஒரேயொரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்துசெல்ல மொகமட் ரபீக் துடுப்பெடுத்தாட வந்தார். இவர் ஓரளவுக்கு நிதானமாக நின்று ஆடத்தொடங்கினார். ஆனால், எதிர்முனையில் பொறுப்புடன் ஆடிக்கொண்டிருந்த மொகமட் அஷ்ரபுல் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றதால் பங்களாதேஷ் அணி நெருக்கடிக்குள் சிக்கியது.

அடுத்ததாகக் களம் இறங்கிய தாரிக் அஸீசும் ஓட்டம் எதுவும் இன்றி ஆட்டமிழந்தார். அதேவேளை மொகமட் ரபீக் கும் 24



ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த தால் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 126 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணி தோல்வி கண்டதால் நியூஸிலாந்து அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இரண்டாவது இனிங்சில் விக்ரோறி 6 விக்கெட்டுக்களையும், வைஸ்மன் 3 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



# தெரிந்து கொள்ளுங்கள்

✤ ஒரு சராசரி மனிதனின் மூளையின் எடை 1,300 கிராம். மூளையிலிருந்து வரும் மத்திய நரம்புகள் - மொத்தம் பதின்மூன்று. மற்றைய சிறு நரம்புகள் எண்ணிக்கையில் அடங்காதவை.

✤ அமெரிக்கா - கனடா எல்லையில் உள்ள நயாகரா நீர் வீழ்ச்சியில் ஒவ்வொரு நொடியிலும் ஏழாயிரம் தொன் நீர் விழுகிறது. ஒரே நிமிடத்தில் 90 ஒலிம்பிக் நீச்சல் குளங்களை நிரப்பும் அளவுக்கு நீர் இங்கு விழுகிறது. 12 ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த நீர் வீழ்ச்சியில் - 94 சதவிதம் கனடாவுக்குச் சொந்தமானது.

✤ உலகின் நீண்ட பாம்பு ரீகல் பைத் என்ற இனமாகும். இதன் நீளம் 33 அடியிலிருந்து 35 அடி வரை இருக்கும். இந்தப் பாம்பு மலாய், பர்மா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் தீவுகளில் வாழ்கிறது.

✤ சூரியன் மறையும்போது அந்தாட்டிக்காவில் மட்டும் பச்சையாகத் தெரியும்.

✤ மூளையின் நிறம் பழுப்பான நீல நிறமாகும்.

✤ முதன் முதலில் தேயிலை பயிரிடும் முறை சீனாவில் தான் ஆரம்பித்தது. புயல் வீசுவதற்கு முன் கடல் நண்டுகள் கரைக்கு வந்து விடுகின்றன.

## இறப்பர் செய்கை

இலங்கையில் இறப்பர் செய்கையை அறிமுகப்படுத்தியவர் ஹென்றி விக்கெம்மி ஆவார்.

முதன் முதலாக 1876 ஆம் ஆண்டு இறப்பர் பயிரிடப்பட்டது.

இலங்கையில் முதன் முதலாக இறப்பர் கம்பஹா, ஹெனரத்கொட பூங்காவில் நாட்டப்பட்டது.

இலங்கையில் இறப்பர் - கேகாலை, களுத்துறை, கொழும்பு போன்ற பிரதேசங்களில் அதிகமாகவும் - மாத்தளை, கண்டி, காலி, மாத்தறை, பதுளை போன்ற பிரதேசங்களில் குறைவாகவும் பயிரிடப் படுகின்றது.

இறப்பர் ஆராய்ச்சி நிலையம் இலங்கையில் அகலவத்தை, டின் பீல்ட் போன்ற இடங்களில் அமைந்துள்ளது.

சு.சஜீவன்
தரம் - 9
இளவாலை.

## ஈழநாடே

வாசகரின் உள்ளம் கவர்ந்திடும் ஈழநாடே
வாசமலராக நீ தினமும் உதித்திடவே
வானளாவ உயர்ந்து நீ நின்றிடவே
வாயார வாழ்த்தித் தொடர்கின்றேன்.

ஈழநாடே மாணவரின்
உள்ளம்மகிழ்ந்திடவே
அறிவு எனும் வெள்ளத்தை பெருக்கியே
நீ சனிக்கிழமை தோறும் தரும்
விந்தைகளையே
நான் என் உளமார உணர்கின்றேன்.


மற்றைய பல அறிவியல் விநோதங்களை
உலகறியா மக்களை உலகறிய
வைத்திடவே
நீ தரும் விளையாட்டுச் செய்திகள் என
பலவாறாக அடுக்கிக் கொண்டே
செல்லலாம்.

உன் விந்தையான விநோதங்களை
ஈழநாடே நீ மேலும் நாடு போற்றிடவே
உன் பணிகள் தொடர என் வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்


யோ. மிதுலா
தரம் - 10
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## சித்திரக்கதை

### குடையின் லீலைகள்


பலமாகக் காற்று வீசுகிறது.


ஐயோ! என் குடை பறக்கிறதே.


காகம் குடையைப் பற்றிப் பிடித்தது.


காகக் குஞ்சுகளுக்கு நல்ல கூடு கிடைத்தது.

(முற்றும்)

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு**

கடும் வார்த்தைகள் பேசுவதால் ஒருவனது இயல்பே கடுமையாக மாறுகிறது.


# சிறுவர் அரங்கம்



# மாயக் குமிழ்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மாயக் குமிழினுள் நின்று கொண்டு நாட்டியம் ஆடும் அதிசயச் செடிகளைப் பார்த்து, அவற்றைப் போலத் தானும் நடனம் செய்தார் புலிக் குட்டியார். நண்பருடன் சேர்ந்து கொண்ட குட்டி யானையார், தானும் துள்ளிக் குதித்து நாட்டியமாடினார்.



நடனத்துடன் சேர்த்து, மாயக் குமிழினுள்ளிருந்து எழும் இசைக்கு ஏற்றது போலப் பாட்டுப் பாடவும் விரும்பினார் புலிக் குட்டியார். மாயக் குமிழின் அருகாகச் சென்ற புலிக்குட்டியார் தனது காதுகளைக் கூராக்கிக் கொண்டு, குமிழினுள்ளிருந்து கேட்கும் இசையை உன்னிப்பாகக் கவனித்திருந்தார்.



புலிக் குட்டியாரே, புலிக் குட்டியாரே எனது மாயக் குமிழினுள் நின்று அழகாய் நடனம் செய்திடும் அதிசயச் செடிகளைப் பார்த்தீரா?

மாயக் குமிழுக்கு வெகு அருகாகச் சென்று நின்றிருந்த புலிக் குட்டியாருக்கு, அடக்க முடியாத தும்மல் வந்தது. அச்சு... என்று பலமாகத் தும்மினார். புலிக்குட்டியாரின் தும்மலால், குட்டி யானையாரின் மாயக்குமிழ் பட்டென்று உடைந்து சிதறிப்போனது.

அற்புதமான தனது மாயக் குமிழ் உடைந்து சிதறிப் போனதைக் கண்ட குட்டியானையார் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை. மாயக் குமிழ் உடைந்து போனது தான் தாமதம் அதனுள்ளிருந்த அதிசயச் செடிகளும் மாயமாய் மறைந்து போய் விட்டன. கவலையோடு கண்ணீர் விட்டு அழுதார் குட்டியானையார்.

மாயக் குமிழ் உடைந்து போய் விட்டது. அது இனிமேல் திரும்பி வராது என்பதை இன்னும் நம்பிடாத புலிக்குட்டியார் - நமது மாயக் குமிழ் மீண்டும் நம்மிடம் திரும்பி வந்திடுமா? எனக் கவலையோடு குட்டியானையாரைப் பார்த்துக் கேட்டார்.

யானைக் குட்டியார் அழுவதைப் பார்த்து அவரும் அழுதார்.

அருமையான எனது மாயக் குமிழை இந்தப் பொல்லாத புலிக் குட்டியார் தும்மி உடைத்து விட்டாரே! என்று நினைத்திருந்த குட்டியானையார், இவ்வளவு நேரமும் புலிக்குட்டியார் மீது கடுமையான கோபமும் கொண்டிருந்தார்.

ஆயினும் உடைந்துபோன மாயக் குமிழ் திரும்பி வருமா? என்று அப்பாவித்தனமாகப் புலிக்குட்டியார் கேட்டதும், கவலையோடு கண்ணீர் விட்டு அழுததும், குட்டியானையாரின் கோபத்தைப் பஞ்சாகப் பறக்க வைத்து விட்டது.

கலங்கி அழுதிடும் புலிக்குட்டியாரைக் கட்டிக் கொண்டு ஆறுதல் சொன்னார் குட்டியானையார்.

யானையாரே, யானையாரே, என்னை மன்னித்துக் கொள்ளும். அற்புதமான உமது மாயக் குமிழை உடைத்ததற்கு என்னை மன்னித்துக் கொள்ளும் என்று குட்டி யானையாரைப் பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் புலிக் குட்டியார்.



தும்மல் வருவதற்கு நீர் என்ன செய்வீர் எனது அருமை நண்பரே என்று சொல்லிப் புலிக்குட்டியாரைச் சமாதானப் படுத்தினார் குட்டியானையார்.

குட்டி யானையாரும், புலிக் குட்டியாரும் பின்னர் பலமுறை முயன்ற போதிலும் முன்னிரவே ஒரு மாயக் குமிழை மீண்டும் அவர்களால் செய்யவே முடிய வில்லை. எனது அருமை நண்பரே கவலைப்பட்டு நீர் அழுதிட வேண்டாம். (முற்றும்)

- யோ.சத்யன்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- ஜெ.கபிரா
பாடசாலை :- சைவத்தமிழ் வித்தியாலயம்.
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :- சித்திரம் வரைதல், கதை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் :- அ.பிரவீன்
பாடசாலை :- ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.
தரம் :- 05
ஆர்வமுள்ள துறைகள் :- ஓவியம் வரைதல், கவிதை எழுதுதல்.



பெயர் :- அ.பகீரதன்
பாடசாலை :- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, கல்வி, பத்திரிகை வாசித்தல், கணினி.



பெயர் :- வே.சுதர்சினி
பாடசாலை :- இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்.
தரம் :- 06
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.

பெயர் :- சே.நிரோயன்
பாடசாலை :- புனித பத்திரிசியார் கல்லூரி.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- தபேலா வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர் :- ஃ.சுவிதா
பாடசாலை :- வேலணை மத்திய கல்லூரி.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.

பெயர் :- அ.சக்ஷன்
பாடசாலை :- யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, ஓவியம் வரைதல், வானொலி கேட்டல்.

## விடுகதைகளும் விடைகளும்

1. அள்ள, அள்ளப் பெரிதாகும். அது என்ன?
2. புள்ளிகளைச் சுமந்தபடி, புல்வெளியில் நடமாட்டம். அது என்ன?
3. இருட்டில் ஒளிர்ந்திடுவார்கள், வெளிச்சத்தில் பதுங்கிடுவார்கள். யார் அவர்கள்?
4. விளக்கை வைத்துக் கொண்டு, விடிய விடியப் பறந்தவன் அவன் யார்?
5. இருட்டை வெளிச்சமாக்கிடுவான், ஆனால் கண்ணைப் பறித்திடுவான். அவன் யார்?

1. பள்ளம். 2. புள்ளிமான். 3. நட்சத்திரம். 4. மின்மினிப் பூச்சி.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

'இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்,**
**சிறுவர் அரங்கம்,**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்





## அன்புள்ள சிறுவர்களே!

கடந்த வாரம் பஞ்சபூதங்களில் இரண்டான காற்று, நீர் பற்றிப் பார்த்தோம். இந்த வாரம் ஏனையவற்றைப் பார்ப்போம்.

நிலம் - நாம் வசிக்கும் தரைப்பரப்பு. நாம் உண்பதற்கான உணவைத் தரையில் இருந்தே பெற்றுக்கொள்கின்றோம். ஏதாவது ஒரு பொருளை வானை நோக்கி வீசும் போது, அது மீண்டும் நிலத்துக்கே திரும்பி வருகிறது. அதற்குக் காரணம் புவியீர்ப்பு விசை இருப்பதனாலேயே எங்களால் நிலத்தில் நடக்க முடிகிறது.

ஆகாயம் பற்றிப் பார்த்தோமானால் - ஆகாயம் எல்லையே இல்லாமல் பரந்து இருப்பதைக் காணலாம். நெருப்பு - பலவழிகளில் எமக்குப் பயன்படுகிறது. வெப்பம் மூலம் உணவைத் தயாரித்துக் கொள்கிறோம். வேண்டாத பொருட்களை எரித்து விடுகிறோம்.

இவை நாம் சாதாரணமாகக் காணும் செயற்பாடுகள். சில நேரங்களில் இவற்றின் மூலம் மனிதன் பலவிதமான பேரழிவுகளுக்கு உட்படுகிறான்.


அடைமழை மூலம் பெருவெள்ளம், புயற்காற்று அல்லது சூறாவளி, கடும் வெப்பம், வரட்சி எரிமலை, நிலநடுக்கம், கடற்கொந்தளிப்பு போன்றவை மூலம் மனிதன் இழப்புகளையும், சொத்து அழிவுகளையும் எதிர்கொள்கிறான்.

இந்த ஐம்பூதங்களைப் பற்றிய மேலும் பல விபரங்களைப் புத்தங்களை வாசிப்பதினூடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பத்திரிகைகளில் - சில நாடுகளில் நடைபெறும் இயற்கை அனர்த்தங்கள் பற்றி வரும். அவற்றைச் சேகரித்து வையுங்கள் . அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள இவை உதவும்.

பாசமுடன் - சாரு அக்கா

## யாருக்கு எந்த யானை கண்டுபிடியுங்கள்



## கறையான்

கறையான்களை ஆங்கிலத்தில் வெள்ளை எறும்புகள் என்று பொருள்பட அழைத்தாலும், அவை எறும்பு இனத்தைச் சேர்ந்தவை இல்லை.

மழை பெய்து, தரை குளிர்ந்து ஓரிரு நாட்களுக்குப் பின், பொழுது சாயும் நேரத்தில், சிறகுள்ள ஆயிரக்கணக்கான ஈசல்கள் இயற்கையின் உந்துதலால், கறையான் புற்றில் இருந்து கிளம்பும். விளக்கு ஒளியைத் தேடிப் பறந்து வரும்போது - விளக்கில் முட்டிமோதி சில உயிரிழக்கும், பறவைகளுக்கு சில இரையாகும். மிஞ்சுபவை ஒரு சில ஈசல்களே. இவை சிறகுகளை உதிர்த்து விட்டு, கூடு அமைத்துக் குடும்பம் நடத்தும். இதுவே ராணிக் கறையான், ராஜாக் கறையான் எனப்படும்.

ராணிக் கறையான் நாளொன்றுக்கு சுமார் 30,000 முட்டைகளை இடும். தொடர்ந்து இந்தக் கறையான்கள் 10 ஆண்டுகள் வரை முட்டை இடும். இந்த முட்டைகளிலிருந்து வெளிவருபவை - கறையான் குஞ்சுகள். இவைகளில் அரச குடும்பம், போர் வீரர்கள், தொழிலாளர்கள் என்று அவை புரியும் பணிகளுக்கு ஏற்ப வகைகள் உண்டு. உருவத்திலும் இவை வேறுபட்டிருக்கும். இந்த வகைப் பிரிவு நிகழ்வதற்குக் காரணம் இவற்றின் உயிர்ப் பொருளே ஆகும். தொழிலாளர் பணிபுரியும் கறையான்களே அவற்றின் முதுகெலும்பு ஆகும்.

இவற்றில் 90 வீதமானவைக்கு கண்கள் இல்லை. அப்படியே கண்கள் இருந்தாலும், பார்வை இராது. அதிர்வின் மூலம் இவை செய்திகளைப் பரிமாறிக் கொண்டு, எச்சரிக்கை செய்து கொள்கின்றன.

காகிதம், மரப்பட்டை, துணி, ஈரம் காக்கும் தரை இவைகளே கறையானின் இருப்பிடம். ஒரு முழு மரத்தை - ஒரு கறையான் குடும்பம் ஒரு மாதத்தில் அரித்துச் சாய்த்து விடும். இது கூடு கட்டும் அழகு, வேகம், அதற்குப் பயன்படுத்தும் மண், மரக்கலவை எல்லாமே வியக்க வைப்பவை.

ராணிக் கறையான் சாதாரணமாக எம்முடைய கண்களில் படாது. இதைக் கண்டு பிடித்து அழிக்காதவரை, புதிய புதிய புற்றுகளை உருவாகிக் கொண்டே இருக்கும். காடுகளில், உதிரும் மரப்பட்டைகளையும், இலைகளையும் அரித்து, மண்ணுடன் சேர்த்து, மண்ணைச் சத்துள்ளதாக்கும். இதன் பணி மகத்தானது.

## மூளைக்கு வேலை

*(சென்ற வார விடை)*

முதலில் தராசில் ஒவ்வொரு தட்டிலும் மூன்று மூன்று நாணயங்களை வைக்கவேண்டும். எடை குறைவான தட்டில் உள்ள மூன்று நாணயங்களை எடுங்கள்.

இரண்டாம் முறை, இந்த மூன்று நாணயங்களில் இரண்டினை எடுத்து, ஒவ்வொன்றாகத் தட்டின் இருபக்கமும் வையுங்கள். தராசு சமமாக இருந்தால், கையில் மீதமிருக்கும் நாணயமே போலியாகும். தராசு ஒரு பக்கம் உயர்ந்து காணப்பட்டால், அந்த நாணயமே போலி நாணயம் ஆகும்.

**புதிர்**

**1.** 12 மாணவர் 12 நிமிடத்தில் 12 பக்கம் கட்டுரையை எழுதினால், ஒரு மாணவன் எவ்வளவு நிமிடத்தில் ஒரு கட்டுரையை எழுதுவான்?

**2.** 'அ' என்பவன், 'ஆ' வைவிட உயரமானவன். 'இ' என்பவன் 'அ' வைவிட உயரமானவன். அப்படியானால் மூவரில் உயரமானவன் யார்?

**3.** தொலைந்த எண் எது?

| | | |
|---|---|---|
| 3 | 9 | 27 |
| 6 | ? | 216 |
| 9 | 81 | 729 |

## கொடியும் நட்சத்திரமும்

உலகிலுள்ள நாடுகளின் கொடிகளில் - மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுவது நட்சத்திரமாகும்.

41 கொடிகளில் இந்தக் குறியீடு, ஏதோ ஒரு வகையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

அடுத்ததாகப் பிரபலமானது பிறைச்சந்திரன் வடிவமாகும். அது 9 கொடிகளில் காணப்படுகின்றன.

**குளிர்காலத்தில் காற்றின் திரள**

குளிர்காலத்தில் - காற்றின் அடர்த்தி அதிகமாக இருக்கும். வெயில் காலத்தில் - அடிக்கும் காற்றின் வேகத்தைவிட குளிர் காலத்தில் 25 சதவீதம் அதிக சக்தியோடு வீசும்.

# அம்மா இசைத்தட்டும் இசைநாடா வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் அம்மா இசைத்தட்டு, இசைநாடா வெளியீடும், ஆக்க இசை அரங்கமும் இன்று காலை 10 மணியிலிருந்து 12 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவற்றின் வெளியீட்டுரையை தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும், மதிப்பீட்டுரையை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், நுண்கலைத்துறை விரிவுரையாளர் நவதர்சினி கருணாகரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# பெரியவிளான் அபிவிருத்திக்கென முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன

வலி. தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட பெரியவிளான் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கான விபரங்களை முழுமையாக உடன் அனுப்புமாறு, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் மானிப்பாய் பிரதேசசபை செயலாளருக்கு முன்மொழிவுக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

கிராம வீதிகள், குடும்பங்கள், விடற்றவர்களின் எண்ணிக்கை, மல சலகூடங்கள், விதவைகள் தொடர்பான விபரங்களை கிராம சேவையாளரது சிபார்சுடன் அனுப்பும்படி கேட்டுள்ளார்.

பெரியவிளான் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள் செய்வதற்கு 25 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (91)

# சைவக்குருமார் சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

இலங்கை வேதாரணிய குரு பரம்பரை சைவக்குருமார், அர்ச்சகர் அனைவரும் ஒன்று சேர்ந்து, யாழ்ப்பாணத்தைத் தலைமை இடமாகக் கொண்டு 'அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்' எனும் ஒரு புதிய சைவக்குருமார் பீடத்தை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர்.

அதன் அங்குரார்ப்பணக் கூட்டம் வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் தர்கா லிக பீடாதிபதி சிவஸ்ரீ பால பத்மநாதக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் ஆண்டின் செயற்குழுத் தெரிவு நடைபெற்றபோது, சிவாச்சாரிய பீடாதிபதியாக சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவராக சிவஸ்ரீ சோ.நந்த கோபாலக் குருக்களும், உபதலைவராக சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வரக் குருக்களும், செயலாளராக சிவஸ்ரீ ம.சிவானந்தராசாக் குருக்களும், உபசெயலாளராக சிவத்திரு மு.தயாபரன் ஐயாவும், பொருளாளராக சிவத்திரு அ.ஆனந்தநடேசன் ஐயாவும் தெரிவுசெய்யப்பட்டனர். 5 குருக்களைக் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அகில உலகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் போசகர்களாக ஸ்ரீபாலபத்மநாதக் குருக்கள் (இலங்கை), சாமி அப்பாத்துரை ஐயா (கனடா), சதா திருஞானசம்பந்தக் குருக்கள் (கனடா), வ.வே.செல்வராசாக் குருக்கள் (லண்டன்), த.மாதவன் ஐயா (சுவிஸ்), த.ஆதவன் ஐயா (ஜேர்மனி), வே.ஆதிபாலன் ஐயா (பிரான்ஸ்) ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (116)

## ஏகாதசி பூஜை

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை காலை 10 மணிக்கு ஏகாதசி விரத பூஜை சிறப்பாக நடைபெறவுள்ளது. பூஜை வழிபாடுகள் விசேட அபிடேக ஆராதனைகளுடன் இடம்பெற்று, நிறைவாக சுவாமி வீதி வலம் எழுந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (206)



அண்மையில் உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையம் நடத்திய 2004 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின்போது விளையாட்டுக்கொடியை கல்விக் குழுத் தலைவர் மு.தர்மலிங்கமும், நிலையக் கொடியை தலைவர் இ.சொர்ணலிங்கம் ஏற்றுவதை முதல் படத்திலும், சிறுவர்களின் அணிநடையை இரண்டாவது படத்திலும் காணலாம். (82)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## 10 ஆவது அகவையில்



பெயர் : செ.சாந்தலக்ஸ்மி
முகவரி : கூவில், புலோலி தெற்கு.

## 10 ஆவது அகவையில்



பெயர் : செ.கௌசிகா
முகவரி : கூவில், புலோலி தெற்கு.

# மறைமுகமாக இயங்கிய கொல்களம் கண்டுபிடிப்பு

(நாவாந்துறை)

நாவாந்துறையில் மறைமுகமாக இயங்கிவந்த கொல்களம் கண்டு பிடிக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த மாட்டிறைச்சி அழிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பாழடைந்த மண்டபம் ஒன்றில் வைத்து, மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதாக இந்தப் பகுதி மக்கள் தமிழீழ சுகாதார சேவையினருக்கும், சுகாதார திணைக்களத்தினருக்கும் தெரிவித்ததையடுத்து, அவர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இந்தக் கொல் களம் கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த இறைச்சிகள் அழிக்கப்பட்டன. இந்த இறைச்சியை சுகாதாரப் பிரிவினர் பரிசோதனை செய்தபோது, அவை நோய்வாய்ப்பட்ட மாடுகளின் இறைச்சி என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், நாவாந்துறைப் பகுதியில் களவு போன சில மாடுகளும் இந்த கொல் களப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், இந்தப் பகுதி கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இறைச்சிகளில் போலி றபர் சீல்கள் பதிக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு சுகாதார சேவையினரால் அவை விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

# பொன்னாலை பகுதியிலுள்ள பொதுக்கேணிகள் புனரமைப்பு

(பொன்னாலை)

பொன்னாலையில் இரு பொதுக் கேணிகள் சங்கானைப் பிரதேச செயலகத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பொன்னாலைப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னுள்ள கேணியும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குப் பின்பக்கத்தில் உள்ள கேணியுமே புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னுள்ள கேணி - கோடை காலங்களில் கால்நடைகளின் நீர்த் தேவைக்காகவும், ஆலயத்தின் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குப் பின்னுள்ள கேணி பிதிர்க்கடன் செய்வதற்கும், கால்நடைகளின் நீர்த் தேவைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கேணிகளின் புனரமைப்புப் பணிகள் சங்கானைப் பிரதேச செயலகத்தின் ஊடாக ஜே/170 கிராம சேவகரின் மேற்பார்வையிலும், பொன்னாலை மாதர் சங்கத்தின் அனுசரணையுடனும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (207)

# சின்னஞ் சிறு செய்திகள்

## பாலபண்டித, பண்டித வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை நாவலர் தர்மகர்த்தா சபையினரால் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்க பிரவேச பாலபண்டித தேர்வுகளுக்குரிய வகுப்புக்கள், நாளை மறுதினம் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புக்களில் சேர்ந்து கற்கையைத் தொடரவிரும்புவோர் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்.

## கட்டுப்படுத்தமுடியாத நடைபாதை வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரும், மாநகரசபை ஊழியர்களும் ஒருங்கே நடவடிக்கை எடுத்தும்கூட, நடைபாதை வியாபாரிகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக யாழ். நகர மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழை பெய்து வரும் காலங்களில் இந்த நடைபாதை வியாபாரிகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் வியாபாரங்களை மேற்கொள்ளாமல் - மக்கள் நடந்து திரிகின்ற இடங்களிலும், வாகன நெருக்கமான இடங்களிலும் வியாபாரத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளிகள் உள் செல்லும் பாதையில் நெருக்கமாக பொருட்களைப் பரவி விற்பதனால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் மிகவும் சிரமமடைவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## சைவப்புலவர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வு அடுத்த ஆண்டு ஏப்ரல் கடைசி வாரமளவில் நடைபெறவுள்ளது.

தேர்வுக்குத் தோற்ற விரும்புவோர் - சைவப்புலவர் சங்கம், 125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பாட விதானம், படிவம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப இறுதித் திகதி 31.10.2004 ஆகும்.

## உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபை நடத்தும் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா நாளை மறு தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில், பிரதேசசபை செயலாளர் ஏ.எம்.ஜோசெப் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார். (116)

## விண்ணப்பங்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள யாழ். வலயக் கல்வித் திணைக்களக் கட்டடத்தில் அமைந்துள்ள பிராந்திய ஆங்கில ஆதார நிலையத்தினரின் பொறுப்பாசிரியர் பதவி வெற்றிடம் சம்பந்தமான விண்ணப்பங்களை இந்த நிலையத்தில் ஒப்படைக்குமாறு யாழ். பிராந்திய ஆங்கில ஆதார நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விடயங்களையும் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய ஆங்கில ஆதார நிலைய இணைப்பாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## பரிசளிப்பு விழா

சுழிபுரம் காட்டுப்புலம் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி பணிப்பாளர் என். சண்முகசுந்தரமும், சிறப்பு விருந்தின்ராக அருட் சகோதரி பி.பேட்டனும் கலந்துகொள்ளவுள்ளனர். (72)

## இலையான்களின் தொல்லை அதிகரிப்பு

(நாவாந்துறை)

நாவாந்துறைப் பகுதியில் அமைக்கப்பட்ட வாடிகளால் இலையான்களின் தொல்லை அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதி வாடிகளிலுள்ள கடலுணவுகளில் இலையான்கள் மொய்ப்பதால் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் இங்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இலையான்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (116)

## தனியார் காணியில் படையினரின் மினிமுகாம்

பருத்தித்துறை - கிராமக்கோட்டுக்கு அண்மையில் படையினர் தனியார் காணியொன்றில் மினி முகாம் ஒன்றை அமைத்துள்ளதால், மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், இவர்கள் வைக்கும் உணவுகளால் கட்டாக்காலி நாய்கள் வீதியில் அதிகரித்துள்ளன. இவை வீதியால் செல்வோரைப் பெரும் சிரமப்படுத்தி வருகின்றன.

யுத்தநிறுத்த காலப்பகுதியிலும் இவ்வாறு குடியிருப்புக்களுக்கு அண்மையில் முகாம்களை அமைப்பது மக்களின் விசனத்துக்குள்ளாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

## மகாபொல சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

2003/2004 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு, அடுத்தமாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குரிய அழைப்பிதழ்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைகள் உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

# பூநகரி - நல்லூர் மகா வித்தியாலயம் போராட்டத்துக்கு பலரை உருவாக்கித்தந்தது

## கட்டட திறப்புவிழாவில் சோ.தங்கன் தெரிவிப்பு



எமது விடுதலைப் போராட்டத்துக்கு பூநகரி - நல்லூர் மகா வித்தியாலயம் பலரை உருவாக்கித் தந்துள்ளது.

பூநகரி பிரதேசம் எமது சரித்திரத்தில் முக்கியத்துவம் பெறுகின்ற பிரதேசம் என, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்தார்.

பூநகரி - நல்லூர் மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடி கட்டடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் போதிய வசதிகள் இல்லாத நிலையிலும் பகுதி நேர ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு மத்தியிலும் தமது கற்பித்தல் செயற்பாடுகளை திருப்தியாக மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதானச் சுழல் ஏற்பட்டு இரண்டரை ஆண்டுகள் கழிந்த நிலையிலும் - பூநகரிப் பிரதேசத்தில் பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகள் இதுவரை செய்துகொடுக்கப் படவில்லை.

இந்த நிலையில் நிகொட் நிறுவனம் பாடசாலையில் இரு மாடி கட்டடங்களை அமைத்துக் கொடுத்து உதவியமைக்கு தனது நன்றியை அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம், வலயக்கல்வி பணிப்பாளர் ப.அரியரத்தினம், நிகொட் பணிப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசிய கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன ஏற்றினார்.

### நிதி ஒதுக்கீடு

அக்கராயன் 8 ஆம் கட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு முல்லைத்தீவு அரச செயலகத்தால் மலசல கூடம், குடிநீர் கிணறு அமைப்பதற்கென 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் புனரமைப்பு வேலைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

## பொருட்கள் வழங்கல்

இந்தியாவில் அகதி முகாமில் தங்கியிருந்து - தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறிவரும் மக்களுக்கு ஜப்பான் நாட்டின் பி.ஏ.ஜே நிறுவனத்தால் உணவு அல்லாத 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரையில் 6 ஆயிரம் குடும்பங்களுக்கான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் 8 ஆயிரம் குடும்பங்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், 6 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே பொருட்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாத மக்களுக்குத் தொடர்ந்தும் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என நிறுவனப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## பாம்புக்கடிக்கு இலக்கானார்

இராமநாதபுரம் பகுதியில் இளம் யுவதி ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

இந்த யுவதி கடந்த செவ்வாய்க்கிழமை ஆலயத்திற்கு சென்று திரும்பிய வேளை, பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் இராமநாதபுரம் 7 ஆம் யூனிற் 555 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் சிந்துஜா (வயது 17) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (இ)

# கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் நுளம்புக் குடம்பிகள் அழிக்கும் பணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் நுளம்புக் குடம்பிகள் அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

எனவே நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் பணியில் பூநகரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக கிணறுகளில் உள்ள நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் வகையில் கிணறுகளுக்குள் மீன் குஞ்சுகளை விடுகின்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

## வரட்சி நிவாரணம் வழங்கப் படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேசத்தில் வரட்சி நிவாரணப் பணிகள் மேற்கொண்டவர்களுக்கு இதுவரை வரட்சி நிவாரணம் வழங்கப் படவில்லை.

இந்த வேலைகள் 14 நாட்கள் செய்யப்படவேண்டும் என்ற வேண்டுகோளின்படி வேலைகளை செய்த போதிலும், இதுவரை இதற்கான வரட்சி நிவாரணம் வழங்கப்படாதது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 25 ஆயிரம் ரூபா வழங்கல்

(கிளிநொச்சி)

4 ஆம் கட்டை அமதிபுரம், 8 ஆம் கட்டை ஆரோக்கியபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள 46 குடும்பங்களுக்கு நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவால் 25 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)




# கிளிநொச்சி - பூநகரி பிரதேச மக்கள் சுத்தமான குடிநீர் பெறுவதில் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேச மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

பூநகரி, கிராஞ்சி, வேராவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவ்தில் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதோடு, பல தொற்றுநோய்களுக்கும் ஆளாகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் குடிநீரைப் பெறமுடியாமையால் அடிக்கடி வயிற்றோட்டம் பரவும் நிலை காணப்படுகிறது. அத்துடன் இங்கு வாழும் மக்கள் மலசலகூட வசதிகள் அற்ற நிலையில், பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

## வர்த்தக சங்கக் கலந்துரையாடல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் வர்த்தகர் சங்கக்கலந்துரையாடல் - வர்த்தகர் சங்கத் தலைவர் சிவலோகநாதன் தலைமையில் கடந்த புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தேநீர்க் கடை, சைக்கிள் கடை, மருந்தகம் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலை யங்கள் பூட்டப்படவேண்டும். மற்றும் வர்த்தக சங்கங்களின் மாதாந்தக் கூட்டம் மாதத்தில் முதல் வருகின்ற வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெறும் எனவும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச பொறுப்பாளர் சோழநிலவன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (09)

## நூலக வாரம் அனுஷ்டிப்பு

(இராமநாதபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அனைத்து பாடசாலைகளிலும் நாளைமறுதினம் முதல் நூலக வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அனைத்துப் பாடசாலைகளிலும் நூலக வாரமாக அனுஷ்டிக்குமாறு கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார்.

இந்த காலப்பகுதியில் பாடசாலை நூலகங்களின் விருத்தியில் கவனம் செலுத்துமாறு பாடசாலை அதிபர்களை அவர் மேலும் கேட்டுள்ளார். (இ)

## சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

(மாங்குளம்)

மாங்குளம் அபிவிருத்தி நிலைய அனுசரணையுடன், சர்வோதயம் நிறுவனத்தால் கரிப்பட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கும், நுளம்பு வலைகள் வழங்கலும் இடம்பெற்றது.

இந்தப் பிரதேசங்களில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக - நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால், பல தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது. இதனைத் தடுக்கும் முகமாக இந்த சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் - சொர்ணபுரி பாடசாலையை மீள இயங்கவைக்குமாறு கோரிக்கை!

மன்னார் - சொர்ணபுரி பாடசாலை இயங்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் இந்தப்பகுதி மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட 'ரணகோஷ' நடவடிக்கையால் இந்தப் பாடசாலை பலத்த சேதமடைந்தது.

இராணுவ நடவடிக்கையால் இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 80 சதவீதமான மக்கள், மூன்று ஆண்டுகளின் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் - இந்தப் பாடசாலை புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் இதுவரை இயங்க முடியாத நிலையில் உள்ளது.

எனவே, இந்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் மன்னார், அடம்பன் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர். இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் மாணவர்களின் நலனைக் கருதத்திற்கொண்டு, இந்தப் பாடசாலையை புனரமைத்து, பாடசாலையை ஆரம்பிக்கவேண்டும் என இந்தப் பகுதி மாணவர்கள், பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாவீரர் அபயன் ஞாபகார்த்தமாக மாலைநேர கற்கை மண்டபம் திறப்பு

(கிளிநொச்சி)

மாவீரர் அபயன் ஞாபகார்த்த மாலை நேர கற்கை மண்டபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார்.

கல்விக்கூடத்தின் பெயர்ப்பலகையை தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், ஊடக வளர்ச்சி பொறுபபாளர் கந்தம்மான் உள்ளிட்ட பலர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தால் தொழில்நுட்பம் சம்பந்தமான புதிய கற்கைநெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இந்த வகையில் அண்மையில் ஜூனியர் டிப்ளோமா இன் கொம்பியூட்டர் சயன்ஸ் என்னும் கற்கை நெறி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தக் கற்கை நெறி தவிர்ந்த ஏனைய கற்கை நெறியில் 119 மாணவர்கள் கற்கை நெறியை பூர்த்திசெய்து வெளியேறினார். இந்தக் கற்கைநெறியானது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவின் தேவைக்கேற்ப வழிகாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு மாங்குளத்தில்

மாங்குள பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கு.சச்சிதானந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மணியழகன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை மாங்குளம், ஒட்டிசுட்டான் கோட்ட பொறுப்பாளர் ஈழவன், மாங்குளம் ஒட்டிசுட்டான் கோட்ட பொருண்மிய இணைப்பாளர் தயா, தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைகளின் பொறுப்பாளர் சஞ்சய் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் மாங்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களும், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வேணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவர் வரவு குறைவு

(மன்னார்)

மன்னார் மூன்றாம்பட்டி கிராமத்தில் 25 சதவீதமான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை.

இந்த கிராமத்தில் மாணவர்கள் பொருளாதார நெருக்கடி, குடும்ப வறுமை, பாடசாலை தூர இடங்களில் அமைந்துள்ளமை, போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். இவர்கள் தமது குடும்பவறுமை, பொருளாதார நெருக்கடிகளை நீக்குவதன் பொருட்டு கூலி வேலை செய்து வருகின்றனர்.

# நலிவுற்றோர் நல்வாழ்வு திட்டத்துக்கு சமுதாய நிலையத்தால் நிதி சேகரிப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள சமுதாய நிலையத்தால் நலிவுற்றோர் நல்வாழ்வு திட்டத்துக்காக நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்துக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இதற்கான சீட்டுக்கள் மாணவர் மத்தியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த சீட்டிழுப்பு எதிர்வரும் 1 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

நலிவுற்றோருக்கு உதவும் நோககில், பெருந்தொகையான அதிஷ்டலாபச் சீட்டுக்களை மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் பற்றாக்குறை

(மன்னார்)

மன்னார் - மூன்றாம்பிட்டி பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

இப்பாடசாலையில் 200 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற போதிலும், 3 ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர். ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கு இந்தப் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில வகுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி பிரதேசத்தில் தமிழீழ மாணவர் அமைப்பினரால் நடத்தப்பட்டு வருகின்ற மேஜர் முரளி ஞாபகார்த்த கணினிப்பயிற்சி நிலையத்தில் ஆங்கில வகுப்புகள் நாளை நடைபெறவுள்ளன.

இதேபோன்று இந்தக் கணினி பயிற்சி நிலையத்தில், வறிய மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் தமிழீழ மாணவர் அமைப்பின் தகவல் தொழிலநுட்ப பிரிவினரால் புதிய கணனி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்றாவது அணியினருக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதான முயற்சிகளைக் குழப்ப; அரசு மேற்கொள்ளும் முயற்சி !

ஏற்கனவே விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக் கால நிர்வாக அதிகாரசபை யோசனைகளுக்கு மாற்றாக புதிய யோசனைகளை முன்வைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசானது, முனைப்புடன் செயற்படுவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கும் தற்போதைய சூழலில் இப்போது போர்நிறுத்த உடன்பாட்டு விதிமுறைகளையும் மீள ஆய்வு செய்வதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அறியவந்துள்ளது.

இந்தப்போர் நிறுத்த உடன்பாட்டின் விதிமுறை ஏற்பாடுகளில் பல விடுதலைப் புலிகளுக்கு சாதகமான நிலைகளையே உள்ளடக்கியுள்ளாதாகவும், இது பாதுகாப்பு படையினரதும் - செயற்பாடுகளுக்கு பாதகமானதாக இருப்பதாகவும் கருதும் அரச தரப்பானது, இந்த உடன்பாட்டின் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யவேண்டியுள்ளதாகவும் இது தொடர்பான ஆலோசனைகளை உரியதரப்பினருடன் மேற்கொண்டுவருவதாகவும் அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக விரைவில் நோர்வே அரசின் சமாதான அனுசரணையாளர்களுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தெரிவிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்ந்த பின்னர் தான் சர்வதேசத்தின் ஆதரவுடனும் நோர்வே நாட்டின் அனுசரணையுடனும் புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டதுடன் அவ்வுடன்பாட்டில் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிட்டத்தட்ட மூன்றாண்டு காலமாக இந்த இரண்டு உடன்பாடுகளும் பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகள் போன்றவற்றிற்கு மத்தியிலும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதுடன் அதன் அடிப்படையிலேயே அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ரணில் அரசு பதவிநீக்கம் செய்யப்படும்வரை பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானமான முறையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட் டன.

மேற்குறிப்பிட்ட இரு உடன்பாடுகளும் எட்டப்பட்ட முதலே இதனைக் கடுமையாக எதிர்த்தும், விமர்சித்தும் வந்தவரான ஜனாதிபதிக்கு இந்த இரு உடன்பாடுகள் எட்டப்பட்டவேளையில், அது குறித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட தன்னுடன் எந்தவிதமான ஆலோசனையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற கோபமும், ஆதங்கமும் இருக்கவே செய்தபோதிலும் அப்போதுள்ள அரசியல் சூழலில் ரணிலுக்கு சாதகமான அரசியல் ஆதரவுச்சூழல் இருந்தாலும்த எந்தவகையிலும் உடனடியாக ஒரு போர்நிறுத்த அமைதிச்சூழல் நாட்டுக்கு அவசியம் என்ற மக்கள் விருப்பு அதிகமாக இருந்தாலும் அவரால் எதனையும் உடனடியாக செய்யமுடியவில்லை.

ஆனால், ரணிலை பழிவாங்குவதற்கான தருணத்தை காத்திருந்து உருவாக்கிய ஜனாதிபதி - அவரது ஆட்சியைக் கலைத்து புதிதாகத் தேர்தலை நடத்தி, சமாதான எதிர்ப்பாளர்கள் தமிழின விரோதிகள் போன்றோரின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்து ஐந்து மாதங்கள் முடிவடையும் தறுவாயில், அது சமாதான முன்னெடுப்புக் குறித்து அரசு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய சர்வதேச அழுத்தம் ஏற்பட்டுள்ள தருணத்தில் மீண்டும் நிலைமையை ஆரம்ப கட்டத்திற்கு தள்ளும் உள்நோக்குடன் போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளை மீளாய்வு செய்வதற்கான அவசியம் குறித்து பிரஸ்தாபித்துள்ளது.

உண்மையில் இந்த மீளாய்வு கோரிக்கையானது இப்போது அவசியமற்றதும், சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பவும், சமாதானம் தொடர்பான விடுதலைப்புலிகளின் பற்றுறுதிமிக்க நிலைப்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவும் அரசு கையாள முனைந்துள்ள ஒரு சதியேயாகும்.


எல்லாவகையிலும் அமைதி முயற்சிகள் எதிலுமே ஆத்மார்த்தமான விசுவாசமில்லாத ஜனாதிபதியும், பேரினவாத ஆதிக்க வெறிகொண்ட அவரது அரசுப்பங்காளிகளினதும் அரசியல் மூலோபாயமானது - ஏதாவது ஒரு சிக்கலை அல்லது கருத்தியல் முரண்நிலையை சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கு ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களை சமாதான முயற்சிகளில் இருந்து விலகிப்போகும் அழுத்தம் ஒன்றைக் கொடுப்பதேயாகும்.

அப்படி ஒரு திட்டம் வெற்றியளிக்குமானால் விடுதலைப் புலிகளே சமாதான முயற்சிகளை குழப்பி விலகிக் கொண்டார்கள் என்ற கருத்தியல் பிரசாரத்தை சர்வதேச சமூகத்தவர்களிடையே பரப்பி தங்கள் மீதான சமாதான முன்னெடுப்புத் தொடர்பான அழுத்தத்திலிருந்து தப்பிவிடலாம் என ஜனாதிபதியும் - அரசும் கனவு காண்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

பேச்சுவார்த்தைகள் இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டம் வரை வந்த பின்னர் போர்நிறுத்த உடன்பாட்டு விதிமுறைகளை மீளாய்வு செய்வதென்பது அர்த்தமற்ற, தேவையற்ற கோரிக்கையேயாகும்.

ஜனாதிபதி சபை குழம்பியாகவும், சமாதானம் குழம்பியாகவும் தன்னை மீண்டும் நிரூபிக்கப் போகிறார் என்பதையே அவரது நடவடிக்கைகள் நிரூபித்து வருகின்றன.

## நாடும் நடப்பும்




# முடியுமானால் புலிகளுக்கு எதிராக ஒரு வார்த்தை பேசிப்பாருங்கள் !

## ரணிலுக்கு விமல் வீரவன்ச சவால்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மாற்றிவிட்டு, புதிய தலைவர் ஒருவரைக் கொண்டு வரும் முயற்சியில் ஐ.தே.கட்சி ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ரணில் விக்கிரமசிங்கவை கட்சியிலிருந்து விலக்கிவிட்டு, சிறந்த ஆளுமைமிக்க தலைவரொருவரை அந்தக் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்கான ரகசியப் போராட்டம் அந்தக் கட்சிக்குள் ஆரம்பித்துவிட்டது. இது அவரின் இயலாத் தன்மையையே காட்டுகிறது. இதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

ரணிலுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு பொது மக்களுக்கு ஆதரவு கிட்டாமல் போயுள்ளது. இதனால் அவர் இன்று அடிக்கடி அவரின் கட்சிக்குள்ளேயே அவருக்குத் தேவையான விதத்தில் ஆலோசனைகளை நடத்திவருகிறார்.

அண்மையில் நடந்த கட்சியின் குழுக்கூட்டத்தில் ஜே.வியியை மட்டுமே இலக்குவைத்து மிகநீண்ட உரையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டுக்கு முன் ஐ.தே.கட்சியால் ஹம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. அதேபோல, எதிர்க்கட்சியின் அமைப்பாளராக இருக்கும் மஹிந்த சமரசிங்கவும், தொலைக்காட்சி விவாதமொன்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது ஐ. தே.கட்சியின் கொள்கைகளில் ஒன்றாகும் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக வருவதற்கு கனவுகண்டு கொண்டிருக்கும் ரணில்- ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கோ அல்லது அதிலுள்ள அதிகாரங்களைக் குறைப்பதற்கோ இன்று ஆயத்தமில்லாதவராக இருக்கிறார்.

ரணிலின் ஆட்சிக் காலத்தைவிட, எமது ஆட்சிக்காலத்தில்தான் பல முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஐககிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்குவந்து ஆறு மாதத்துக்குள்ளேயே அதை நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

இதனை சகித்துக் கொள்ள முடியாத காரணத்தாலேயே ரணில் இன்று தனது இயலாத்தன்மையை வெளிக்காட்டும் வகையிலான உரைகளை நிகழ்த்துகிறார் என, விமல் வீரவன்ச அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## இரவு நடமாடிய பெண்ணுக்கு ஒருவருட சிறைத் தண்டனை

உரும்பிராய் பகுதியில் இரவு வேளையில் தனியாக நடமாடிய பெண்ணுக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்தமாதம் 25 ஆம் திகதி உரும்பிராய்ப் பகுதியில் இரவு 11.45 மணியளவில் தனியாக நடமாடியதாகத் தெரிவித்து, கோப்பாய்ப் பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்து, இந்தப் பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டதுடன் இவரை இரட்சணிய சேனை இல்லத்துக்கு அனுப்புமாறு சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

## ஹக்ரப் ஹொக்லன்ட் ஜயந்த தனபாலவுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று முன்தினம் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, கொலைச் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பது உட்படப் பல விடயங்கள் பேசப்பட்டன.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதித் தலைவரிடம் வினவியபோது, சந்திப்புக் குறித்து எந்தவித கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வருவது தொடர்பாகவும், அதன்போது அரசாங்கம் உதவுவது சம்பந்தமாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன என்றும் தெரி விக்கப்படுகிறது.

# அடுத்த வருடம் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும்!

## ஐ.தே.க கோருகிறது

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் - அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதை அரசாங் கம் உறுதிப்படுத்த வேண்டும் என, ஜக்கிய தேசியக் கட்சி கோரியுளளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பிரீஸ் இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில் -

அரசியல் அமைப்பின்படி ஒருவர் ஜனாதிபதியாக இரண்டு முறையே பதவியை வகிக்க முடியும். அந்த இரண்டு வருடகாலம் முடிவடைந்த பின்னர், குறிப்பிட்ட பதவியில் இருப்பவர் விலகிச் செல்லவேண்டியது அவசியமாகின்றது.


இந்த நிலையில் அந்தப் பதவிக்காலத்தை நீடிப்பதோ அல்லது மீண்டும் பதவிக்குவர முயற்சிப்பதோ அரசியல் அமைப்புக்கு முர்ணானது.


அரசாங்கம் தேர்தலின் போது அடையாள அட்டையை அறிமுகப் படுத்தி, சுமார் 38 லட்சம் பேரின் வாக்குரிமைக்கு குந்தகம் விளைவிக்க முன்னர் எதிர்கட்சியின் தலையீட்டினால் அது தடுக்கப்பட்டது.

அரசாங்கம் தனது வரவு -செலவுத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு என்ன நிவாரணங்களை வழங்க இருக்கிறது என்று அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

தொல்லியல்

# சாட்டியில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட போர் வீரனின் புடைப்புச் சிற்பங்கள் மீட்பு





கடந்த ஒரு மாதகாலத்துக்கு மேலாகத் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு வரும் யாழ்.பல்கலைககழக வரலாற்றுததுறையைச் சேர்ந்த தொல்லியல் கற்றைநெறி மாணவ ஆய்வுக் குழுவினர் நேற்று முன்தினம் மிகத்தொன்மை வாய்ந்த போர் வீரர்களைச் சித்தரிக்கும் புகைப்படச் சிற்பங்களை நிலத்துக்கு அடியிலுள்ள பாறைக்குள் கண்டு பிடித்தனர். இந்தக் கண்டு பிடிப்பை இலங்கைத் தமிழரின தொண்மை பற்றிய வரலாற்றாய்வில் ஒரு திருப்புமுனை எனக் கூறும் இந்த ஆய்வை வழி நடத்தி வரும் கலாநிதி புஷ்பரட்ணம் தமிழ் நாட்டு மக்களின் தொல் வரலாறு கூறும் சங்க இலக்கியத்தில் உள்ள இருபது பாடல்கள் போரில் இறந்தோர், பொது நன்மைத் தியாகிகள், மன்னர்கள் இறந்ததும் அவர்களை அடக்கம் செய்த ஈமச் சின்னத்தில் நினைவுக்கல் எழுப்பி, அதில் அவர்களை நினைவுபடுத்தும் உருவங் களைச் செதுக்கி, அவற்றை மக்கள் வழிபட்டதாகக் கூறுகின்றன.

இதனை அகநாநூறு ‘நெடு நிலை நடுகல்’ என வர்ணிக்கின்றது. தென்னிந்தியா குறிப்பாக தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 225 இற்கும் மேற்பட்ட நடுகற்கள் பற்றி அண்மையில் விரிவான ஆய்வை மேற்கொண்ட தஞ்சைப் பல்கலைக் கழக தொல்லியற் பேராசிரியர் க.இராசன் கி.மு 9ஆம் நூற்றாண்டிலிருந்து - கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நிலவிய பெருங் கற்கால ஈமச்சின்னத்தில் 100 இற்கும் மேற்பட்ட நடுகற்கள் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டு, அந்தக் கல் மக்களால் வழிபடப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறுகிறார்.

ஆனால் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டது போன்ற இறந்தவனின் உருவமைத்த நடுகல் அல்லது நினைவுக் கற்கள் கி.பி.4 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய கலத்துக்குரிய பண்பாடுகளில் மட்டும் காணப்படுவதால், சங்க இலக்கியத்தின் தோற்றக் காலத்தையிட்டுக் கேள்வி எழுப்பியிருந்தார். இந்த நிலையில் சாட்டியில் பெருங்கற்கால ஈமச் சின்னத்துடன், அதில் அடக்கம் செய்யப்பட்டவனுடன் தொடர்புடையதெனக் கருதக் கூடிய சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சங்க இலக்கியம் கூறும் வரலாற்றை உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

இந்தச் சிற்பம் 2 அடி விட்டமும்,12 அடி ஆழமும் கொண்ட வட்டவடிவமாகக் கட்டப்பட்ட ஈமச் சின்னத்தில் 9 அடி ஆழம் கொண்ட மேற்குப் பக்கப் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. அதில் கிழக்குப் புறம் பார்த்த நிலையில் உள்ள பெரிய மனிதன், தனக்கு வலப்புறமாக இருக்கும் சிறிய மனிதனின் தலையை தனது வலது கையால் பிடித்து அடக்குவது போலவும், சிறிய மனிதன் - அதைத் தனது இடது கையால் தடுப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிற்பத்தை ஆதாரமாகக் கொண்டு, இங்கு அடக்கம் செய்யப் பட்பட மனிதன் ஒரு போர் வீரனாக அல்லது அக்காலச் சமுகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவனாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இந்தச் சிற்பத்தின் காற்பதங்களுக்கு அடியில் மட்பாண்டங்கள் காணப்படுவதுடன், மேலும் 3 அல்லது 4 அடி ஆழத்தில் தொல்பொருட்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. அவை முழுமையாக அகழப்பட்டு ஆராயப்படும் போது, இந்தச் சிற்பம் - ஈமச் சின்னம் தொடர்பான மேலும் பல உண்மைகள் வெளிவரலாம்.

இலங்கையில் இதுவரை 26 இறகும் மேற்பட்ட இடங்களில் பெருங் கற்கால ஈமச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் எந்தவொரு இடத்திலும் நடுகல் அல்லது நினைவுக்கல் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் முதன் முறையாகச் சாட்டியில் அதுவும் சங்க இலக்கியம் கூறுவதை அப்போது நினைவுபடுத்துவது போன்ற நினைவுக்கல் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது, முக்கிய வரலாற்றுத் திருப்பமாகக் கருதுகிறேன் என்றார்.

இந்தச் சிற்பம் கண்டுபிடிக்கப் பட்டதை அறிந்த பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி, வரலாறு, சமூக வியற் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பேராசிரியர் சிவசாமி உட்படப் பலரும் பார்வையிட்டதுடன், யாழ். அரச அதிபர் தனது உயர் அதிகாரிகளை அனுப்பி, சிலை கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னத்தை அந்த இடத்தி லேயே பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பிரச்சினைகள்... சரா மாஸ்ரர்

# பாடசாலைகளில் பிள்ளைகளை இணைத்தலும் - அனுமதி பெறலும்

அண்மைய காலங்களில் பாடசாலையைவிட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் பல்வேறு புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இதற்குப் பல காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1. மாறிவரும் சமுதாயச் சூழல்.
2. பாடசாலைகளில் ஏற்படும் சுமை.
3. வீட்டுக்கும், பாடசாலைக்கும் இடையேயான தூரம்.
4. கல்வித்துறைசார் சமூகத்தின் அக்கறையின்மை
5. பெற்றோர்களின் கவனக் குறைவு
6. பிரபல பாடசாலைகளின் நெருக்கடிததன்மை

**பாடசாலைகளால் வழிப்படுத்தப்பட வேண்டிய இளம் சமூகத்தினர் எவருடைய வழிப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட முடியாத அளவுக்கு சீர்கெட்டு வருவதை, அண்மைய பத்திரிகைச் செய்திகள் பறைசாற்றி நிற்கின்றன. எனவே மாறிவரும் உளமாற்றல்களுக்கேற்ப கல்விக் கொள்கைகளை வகுத்து, மாணவர்களால் கல்வி விரும்பப்படுகின்ற அளவுக்குப் பாடநூல்களும், போதனை முறைகளும் அமைவதோடு, கற்றலுக்குப் பின் தொழில் என்ற தன்மைக்கு சீர்படுத்தப்பட வேண்டிய தேவை உருவாகியிருக்கின்றது.**

## மாறிவரும் சமுதாயச் சூழல்

காலத்துக்குக் காலம் நாகரிக மாற்றமும், சமுதாய மாற்றமும் ஏற்படுதல் வழமை. அந்த மாற்றங்கள் வளரும் சமுதாயத்துக்கு உந்து ச்க்தியாக அமைந்தனவேதவிர முட்டுக் கட்டையாக அமையவில்லை.

ஆனால், தற்போதைய மாற்றங்கள் குறிப்பாக மாணவர்களின் நடத்தை அதன் மூலம் கல்வி வளர்ச்சியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி நிற்கின்றது. திரைப்படங்கள், நாடகங்கள், தவறான வழியில் கிடைக்கும் தடை செய்யப்பட்ட காட்சிப் பொருட்கள் இவையெல்லாம் மாண வர்களை ஆக்கிரமித்துத் தட்டிக் கேட்கத் தாய் தந்தையரே தயங்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. ஒரு சிலரிடத்தில் காணபபடுகின்ற தாராள பணப்புழக்கம், வறிய மாணவர்களை வசைப்படுத் திப் பாழாக்கும் நிலை, அண்மைய காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

உலகமயமாக்கலின் (GLOBALISATION) சரியான தன்மையை உணர்ந்து கொள்ளாத இந்த மாணவப் பருவம் - கட்டுக்கோப்பில்லாத பலவீனமான சமுதாயத்தை உருவாக்கித்தரப் போகின்றது.

## வீட்டுக்கும், பாடசாலைக்கும் இடையேயான தூரம்.

கல்விக் கொள்கையின் படி, பாடசாலைக்குச் செல்வது சுமையான போக்குவரத்தாக அமையுமாக இருந்தால் மாணவரின் கல்வி உள்ளீர்ப்பில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். தங்களுடைய பிள்ளைகள் தரமான, பிரபல்யமான பாடசாலைகளில் கற்கவேண்டும் என்ற அவாவோடு நகர்ப் புறம் நோக்கிய பாடசாலைகளுக்குப் பிள்கைளை அனுபபும் கிராமத்தைச் சார்ந்தவர்கள், பிள்ளைகளுக்கு போக்குவரத்தால் ஏற்படும் பின்னடைவைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. மாறாக கிராமப்புற மாணவர்கள், நகர்ப் புறத்தில் கற்கக்கூடாது என்பதல்ல. அதனால் ஏற்படும் பின்னடைவு கல்வி உயர் நிலையைப் பாதிக்கும் என்பது உண்மை.

உதாரணமாக - தூர இடங்களிலிருந்து காலை 6.00 மணிக்கு பாடசாலை நோக்கிப் புறப்படும் ஒரு மாணவன் மாலை 6.00 மணிக்கு வீடு வந்து சேருகின்றான். பாடசாலைக் கற்றலில் ஆறு மணித்தியாலங்களையும், போக்குவரத்தில் ஆறு மணித்தியாலங்களையும் செலவு செய்கின்றான். களைப்படைந்து வரும் அவனால் கற்றதை மீட்பதற்கோ, கற்க வேண்டியதைத் தயார்படுத்து வதற்கோ முடியாமற்போகும்.

தற்போதைய காலம் 2005 ஆம் ஆண்டில் தரம் - 1 இற்கு மாணவர்களை பாடசாலைகளில் இணைப்பதற்கான விண்ணப்பங்களைக் கொடுக்கும் காலம். இந்தக் காலத்தில் பல்வேறு இறுக்கமான நடைமுறைகளையும் மீறிப் பெற்றோர்கள் பிரபல்யமான பாடசாலைகள் என்று விண்ணப் பிக்கத் தொடங்கிவிட்டனர். பாடசாலைகள் கேட்காமலேயே பெருந் தொகைப் பணத்தைக் கொடுக்கத் தயாராகி வருகின்றனர்.

ஆனால், அயல் சூழலில் இருக்கின்ற பாடசாலைகள் எத்தனையோ பல்வேறு வளங்களோடு, விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலோடு, காத்துக் கிடக்கின்றது. அந்தப் பாடசாலையில் சுற்றாடலில் இருக்கின்றவர்களே, பிற பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்து, அந்த அயற் பாடசாலைகளை மூடுகின்ற அளவுக்கு அல்லது வேறு பாடசாலைகளோடு ஒருங்கு சேர்க்குமளவுகக்கு அண்மைக்கால மாணவர் அனுமதிகள் சுட்டிக்காட்டுகின்றன. தரம் 1 இற்கு சில பாடசாலைகளில் 5,6 பிரிவுகளும், சில பாடசாலைகளில் 5, 10 மாணவர்களும் இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை தோன்றிவருகின்றது.

## கல்வித்துறைசார் சமூகத்தின் அக்கறையின்மை.

பல்வேறு நூல்களையும், கல்விக கொள்கைகளையும் வெளியிட்டு வரும் கல்வி அமைச்சும், அந்தத் துறைசார் சமூகத்தினரும் ஆராய்ந்து தீர்வுகளை காணமுடியாத அளவுக்கு மாணவர் கல்விச் சுமையும், மாணவர் மத்தியில் ஏற்படும் சீர்கேடுகளும், பரிணமித்து வருகின்றன.

பாடசாலைகளால் வழிப்படுத்தப் பட வேண்டிய இளம் சமூகத்தினர் எவருடைய வழிப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட முடியாத அளவுக்கு சீர்கெட்டு வருவதற்கு, அண்மைய பத்திரிகைச் செய்திகள் பறைசாற்றி நிற்கின்றன. எனவே மாறிவரும் உளமாற்றல்களுக்கேற்ப கல்விக் கொள்கைகளை வகுத்து, மாணவர்களால் கல்வி விரும்பப்படுகின்ற அளவுக்குப் பாடநூல்களும், போதனை முறைகளும் அமைவதோடு, கற்றலுக்குப் பின் தொழில் என்ற தன்மைக்கு சீர்படுத்தப்பட வேண்டிய தேவை உருவாகியிருக்கின்றது.

## பெற்றோரின் கவனக் குறைவு.

தனியே பாடசாலைகளையும், கலவிக் கூடங்களையும் நம்பி முழுப் பாரத்தையும் அதிபர், ஆசிரியர்கள் மீது விட்டு விட்டு, தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை எள்ளளவேனும் சீர் தூக்கிப் பார்க்காமல் இருக்கின்றார்கள் சில பெற்றோர். மாறி வரும் வயதிற்கேற்ப அவர்களின் நடத்தைக் கோலங்களிலும் மாற்றம் ஏற்படும் என்பதனை உணராமல் இருக்கின்றனர். இதனால் கல்வி நிலை மட்டுமல்லாது, எதிர் கால வாழ்க்கை நிலையும் பாதிக் கப்படும் என்ற உண்மையை உணரத தவறுகின்றனர்.

மேலாகத் தங்களின் பொழுது போக்கிற்காகத் தொலைக்காட்சி போன்ற சாதனங்களுக்குத் தங்களையும், தங்கள் பிள்ளைகளையும் அர்ப்பணம் செய்கின்றார்கள்.

எமது கலாசாரத்திற்கே ஒத்துவராத, பொருத்தமில்லாத சினிமாக்களுக்கும், தொடர் நாடகங்களுக்கும், வசப்பட்டு உள்வாங்க வேண்டிய பல விடயங்களை விட்டு விட்டு, நேரங்களை வீணாக்கித் தேவையில்லாத விடயங்களைப் பிள்ளைகள் மனதில் பதியவைக்கின்றார்கள். அந்தச் சாதனங்களுக்கு அடிமையாகித் தங்கள் கடமைகளைச் செய்யக்கூட மறந்து விடுகின்றார்கள்.

## பிரபல பாடசாலைகளின் நெருக்கடித் தன்மை

இத்தனை மாணவர்களைக் கொணடால் அது இன்ன தரப்பாடசாலையாகக் கணிக்கப்படும் என்ற சுற்றறிக்கையை நிஜமாக்கி பாடசாலைகளில் இருந்து விடுகைப் பத்திரங்களை எடுத்து வாருங்கள் என் கூறும் பிரபல பாடசாலைகளில் தோன்றுகின்ற நெருக்கடி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும்.

குறித்த தொகை மாணவர்களைக் கொண்டிருக்கவேண்டிய வகுப்புகளில் மேலதிகமாக மாணவர்களை வைத்திருப்பது பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும் பெருஞ் சுமையாக அமைகின்றது. ஆசிரியர்களின் வேலைப்பழு அதிகரக்க அதிகரிக்க அவர்களின் தேடல் ஆர்வம் குறைந்து கொண்டே போகும். மாறாக கிராமப்புற பாடசாலைகளில் ஒவவொவகுப்பிலும் பத்து, பதினைந்து மாணவர்கள் இருக்கின்றனர். அவர்களோ பாடசாலைக்கு வந்தால் போதும் ஏற்ற தன்மையைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அவர்களுக்கூடாக சிறப்பானதொரு வெளியீட்டை ஆற்ற லிலுள்ள ஆசிரியர் ஒருவர் வெளியிடுவதென்பது முடியாத காரியமாகின்றது. இதனால் அந்த ஆசிரியர்களுக்கு சலிப்பு ஏற்பட்டு பெறுமதிமிக்க ஆசிரிய வளம் இழக்கப்படுகின்றது.

எனவே பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியோடு சமூக ஒருங்கிணைப்பு வளர்ச்சியில் அனைவரும் ஆர்வத் தோடு இதய சுத்தியோடு செயற்பட்டால் நம் நாட்டிற்கும், தேசத்திற்கும் உகந்த சமுதாயம் உருவாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதலில் பலி!



(காஸா)

இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் குவாசம் என்ற றொக்கட்டை வடிவமைத்தவரான அட்னான் அல்-கௌவுல் என்பவர் கொல்லப்பட்டார்.

காஸாவின் வடபகுதியில் அவர் காரில் பயணம் செய்துகொண்டிருந்த வேளை இஸ்ரேல் படையினர் இரண்டு முறை இந்த ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். கொல்லப்பட்ட அட்னான் அல் கௌவுல் பொறியியலாளராவார்.

கடந்த 15 வருட காலமாக இஸ்ரேல் படையினரால் தேடப்பட்டுவந்த இவர் மீது மூன்றுமுறை தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இந்தத் தாக்குதல்களில் இவர் மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார்.

இஸ்ரேல் படையினரின் ஏவுகணைத்தாக்குதலில் அட்னான் அல் - கௌவுல் கொல்லப்பட்டாரென ஹமாஸ் அமைப்பின் பேச்சாளரான முசார் - அல் - மாஸ்ரியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் இமாட் அப்பாஸ் என்ற மற்றொரு உறுப்பினரும் கொல்லப்பட்டதுடன் மேலும் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலின் பின்னர் இஸ்ரேலியக் ஹெலிகள் காஸாவின் வட பகுதியிலுள்ள உள்ளூர் அமைப்பொன்றின் தலைவரான அமீர் குவாட் மௌண்ட் என்பவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியபோதும் எவருக்கும் காயமேற்படவில்லை.

ஆனால், இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளின் ஆயுதத் தொழிற்சாலையையே தாம் தாக்கியழித்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் படையினர் தாக்குதல்களை நடத்தி



வருகின்றனர். இந்தத் தாக்குதல்களால் கடந்த 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து இதுவரை 175 பலஸ்தீன ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலில் இயங்கும் மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படையினரையும், யூதக் குடியிருப்புக்களையும் அகற்றுவது தொடர்பான பிரதமர் ஏரியல் ஷரோனின் திட்ட வரைபுக்கு ஆதரவாக கடந்த சில நாட்களுக்கு முன்னரே இஸ்ரேல் நாடாளுமன்றில் வாக்களிப்பு நடத்தப்பட்டிருந்தது.

காஸாப் பகுதியிலிருந்து படையினரும், குடியிருப்பாளர்களும் விலக்கப்படுவதற்கு முன்னர் ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதுதான் பிரதமர் ஷரோனின் முக்கிய குறிக்கோள் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

## சீனாவிலுள்ள தென்கொரியப் பாடசாலையில்

# வடகொரியாவின் 29 பொதுமக்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்!

வடகொரியாவைச் சேர்ந்த 29 பொதுமக்கள் சீனாவின் தலைநகர் பீஜிங்கிலுள்ள தென்கொரியப் பாடசாலை ஒன்றில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

தஞ்சம் கோரியவர்களுள் 23 பேர் பெண்கள் என்றும் ஏனைய 6 பேரும் ஆண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் - பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த வேலியைத் துண்டித்துக்கொண்டு குறிப்பிட்ட பாடசாலையினுள்ளே சென்று அதிபரிடம் அரசியல் தஞ்சம் வழங்குமாறு சத்தமிட்டுள்ளனர்.



ஆனால் அவர்கள் தஞ்சம் கோரிச் சென்றுள்ள பாடசாலை அரசியற் தஞ்சம் கோருவதற்கு உரிய இராஜதந்திர இடமல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பாடசாலையில் 556 தென்கொரிய மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




கடந்த 2002 ஆம் ஆண்டிலிருநது சீனாவின் அரசியற் கொள்கைகளுக்காக வெளிநாட்டவர்கள் சீனாவில் அரசியல் தஞ்சம் கோருகின்றமை அதிகரித்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியாவிலிருந்து தென்கொரியாவிற்குள் நுழைந்தவர்களை மீண்டும் வடகொரியாவுக்கு திருப்பியனுப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் சீனா ஊடாக வடகொரியர்கள் தென்கொரியாவிற்குள் நுழைவதற்கு தனது நாட்டை களமாகப் பயன்படுத்துவதற்கு சீனா அனுமதியளித்து வருகிறது.

இவர்கள் தொடர்பாக தென்கொரிய அரசாங்கம் தனது நாட்டிலுள்ள வடகொரிய தூதரகத்திற்கு அறிவித்துள்ளது. பெரும்பாலும் தூதரகம் ஊடாக இவர்கள் வடகொரியாவிற்கு அனுப்பிவைக்கப்படுவர் என தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட

# மசிடோனிய பிரஜைகள் கொலை செய்யப்பட்டனர்!



ஈராக்கில் பணியாற்றியவேளை இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட மூன்று மசிடோனியா நாட்டுப் பிரஜைகளையும் கிளர்ச்சிவாதிகள் கொன்றுவிட்டதாக மெசிடோனிய அரசு தமக்குத் தெரிவித்துள்ளதாக இந்த மூவரின் உறவினர்களும் தெரிவித்தனர்.

டலிபூர் லாசார்வ்ஸ்கி, சுரான் நஸ்கோவ்ஸ்கி மற்றும ட்ரகன் மார்க்கோவிக் ஆகிய மூன்று பணியாளர்களுமே பாக்தாத்துக்கு அருகில் வைத்து கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி கடத்தப்பட்டனர்.

கடந்த வாரம் அல்-ஜசீரா தொலைக்காட்சியும் கடத்தப்பட்ட இந்த மூவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. ஆனாலும் இதை மெசிடோனிய அரச அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை. இருந்தபோதிலும் இது தொடர்பான அறிக்கையொன்றை மசிடோனிய அரசு விரைவில் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக மசிடோனிய அரச அதிகாரிகள் கட்டாரில் இயங்கும் அல்-ஜசீரா தொலைக்காட்சி நிறுவனத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று ஒளிபரப்பிய வீடியோ நாடாவையும் பார்வையிட்டனர்.

இஸ்லாமிய இராணுவம் எனத் தெரிவித்த ஒரு குழுவே அல்-ஜசீரா மூலம் இந்தத் தகவலை வெளியிட்டதாகவும், அதில் அவர்களால் கடத்தப்பட்ட இருவர் அமெரிக்க உளவாளிகள் எனவும் எனவே அவர்கள் இருவரையும் கொன்றுவிட்டதாகவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், கடத்தப்பட்ட மூன்றாமவரின் நிலை என்னவென்பது தொடர்பாக உறுதியான தகவலெதுவும் தெரியவில்லை.

ஈராக்கில் 32 மசிடோனியப் படையினர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கின் மத்திய பகுதிக்கு

# பிரிட்டிஷ் படைகள் செல்லவுள்ளதை அமெரிக்க அரசு வரவேற்றுள்ளது!

அமெரிக்காவின் கோரிக்கைக்கு ஏற்ப பிரிட்டிஷ் துருப்பினர் மீண்டும் மத்திய ஈராக்கிற்கு அனுப்பப்படவுள்ளமைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இதற்கமைய பிரித்தானிய கறுப்பு காலாற்படையைச் சேர்ந்த 500 படைவீரர்களையும் 350 உதவியாளர்களையும் பிரித்தானிய அரசாங்கம் ஈராக்கின் மத்திய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

ஈராக்கின் மத்திய பகுதியில் உள்ள அமெரிக்கப் படையினருடன் இணைந்து இவர்கள் செயற்படவுள்ள போதும் பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே செயற்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானியப் படையினருக்கு தலைவர் நியமிக்கப்படுவர். அவருக்கு சூழ்நிலைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும். இவர் தமது படையணிகளை தேவைக்கேற்ப வழிநடத்துவார்.

இவர்கள் ஈராக்கில் பஸ்ரா நகரத்தை உள்ளடக்கிய பாரிய நிலப்பரப்பில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டவுள்ளனர். இவர்களுக்கு தீவிரவாதிகளது தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்காக இராணுவ ஆயுத தளபாடங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

இவர்கள் பஸ்ரா நகரை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவர் என பிரித்தானிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களை ஒருங்கிணைக்கும் தொழில்நுட்ப அதிகாரி



யாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். ஆனால் இவருக்கு பிரிட்டன் படைவீரர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை.

பிரித்தானியாவின் இந்த முடிவு தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் றிச்சட் பௌச்சர் - பிரித்தானியா உரிய நேரத்தில் உரிய பங்களிப்பை வழங்கியுள்ளதாகப் பாராட்டியுள்ளார்.

# பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய பிடல் காஸ்ரோ தவறி வீழ்ந்தார் !



கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ கடந்த புதன்கிழமை இரவு சாந்தகிளாரா என்ற இடத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியவேளை கீழே தவறுதலாக விழுந்துள்ளார்.

இவ்வாறு இவர் விழுந்ததனால் ஏற்பட்ட காயத்திலிருந்து விரைவில் குணமடைய வேண்டுமென்று தெரிவிக்கும் செய்தியை அனுப்ப அமெரிக்கா மறுத்துள்ளதுடன் தாம் நீண்டகாலமாக எதிர்பார்த்த பிடல் காஸ்ரோவின் வீழ்ச்சி இதுவல்ல எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தனது காயத்திறகு மயக்கமருந்து வழங்கி சிகிச்சை செய்வதனை மறுத்துள்ள காஸ்ரோ, இது தனது நாளாந்தப் பணிகளுக்கு பெரும் தடையாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெனிசுலாவின் இடதுசாரித் தலைவரான கியூகோ சாவேஷ் - பிடல் காஸ்ரோ விரைவில் குணமடைய வேண்டுமென செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

இதேவேளை பிடல் காஸ்ரோவின் இந்த விழுகைக்குப் பின்னர் கியூபாவில் அவருக்கு அடுத்தபடியாக யார் உள்ளனர் என்ற வினா இயல்பாகவே எழுந்துள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

பிடல்காஸ்ரோ விரைவில் குணமடைய வேண்டுமெனத் தெரிவித்து ஏதாவது செய்தி அனுப்புவீர்களா என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் றிச்சட் பௌச்சரிடம் கேட்டபோது அவர் உடனடியாகவே இல்லை என மறுத்ததுடன் கியூபா மக்கள் மிக நீண்டகாலமாகவே பிடல் காஸ்ரோவின் ஆட்சியின் கீழ் துன்பப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் தனது இந்தச் சம்பவத்தை பெரிதாக்கியதையிட்டு தான் மிகவும் மனம் வருந்துவதாக நேற்றுமுன்தினம் 1183 சொற்கள் கொண்ட கடிதம் ஒன்றை காஸ்ரோ வெளியிட்டு தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஈராக் கைதிகள் துன்புறுத்தல்:

# அமெரிக்கப் படை வீரருக்கு 8 வருட சிறைத்தண்டனை!



ஈராக்கின் அபுகிறாப் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளை துன்புறுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்கப் படைவர் ஒருவருக்கு எட்டு வருட சிறைத் தண்டனையை பாக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவ நீதிமன்றம் விதித்துள்ளது.

அமெரிக்க இராணுவீரரான சார்ஜன்ட் இவான் பெட்றிக் என்பவருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் இவர் மீது ஐந்து குற்றச் சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த இராணுவ வீரரின் பதவி நிலையைக் குறைத்து அவருக்கு வழங்கப்படும் ஊதியத்தை நிறுத்தி அவரை இராணுவத்திலிருந்து நீக்கிவிடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால் நீதிமன்றம் வழங்கிய இந்தத் தண்டனை மிக அதிகமெனவும் எனவே இதனை குறைக்குமாறு கோரி மேன்முறையீடு செய்யப் போவதாகவும் பெட்றிக்கின் சட்டத்தரணியான ஹரி மையர்ஸ் றொய்ட்டர் செய்து நிறுவனத்திற்கு தெரிவித்தார்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வெள்ளை வானில் கடத்தப்பட்ட இளைஞர் காணாமற்போனதற்கு இராணுவத்தினரே காரணமாவர்!

## வவுனியா நீதிமன்றம் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் 15 ஆம் திகதி வெள்ளை வானில் கடத்தப்பட்ட நபர் தொடர்பாக, உரிய நடவடிக்கை எடுக்காததற்கு இராணுவத்தினரே காரணமென - வவுனியா நீதிமன்றம் கருதுவதாக, வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

15.08.2000 இல் வெள்ளை வானில வந்த அதிரடிப்படை சீருடை அணிந்தவர்கள் - நெளுக்குளம் அம்பாள் தொலைத்தொடர்பு மையத்திற்கு முன்னால், அரியதாஸ் விஜயகுமார் (வயது 22) என்பவரைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும், இராணுவமே தனது மகனைக் கைது செய்திருப்பதாகவும், காணாமற்போனவரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுசெய்து, பின்னர் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிராளிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத போதும், வழக்காளி தரப்பில் காணாமற்போனவரின் தாயார் ஆஜராகியிருந்தார்.

நீதிமன்றில் - வவுனியா மாவட்ட நீதிவான் தனது பரிந்துரையை வாசித்தார். 2000 ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் இருந்த காலமாகும். இந்தக் காலகட்டம் - இராணுவத் தரப்பினருடன் தமிழ் இயக்கங்களும் இணைந்து செயற்பட்ட காலம ஆகும். இதன்போது குறித்த இளைஞன் வெள்ளை வானில் வந்தவர்களால் கைதுசெய்யப்பட்டு இருப்பதாக வழக்கு விசாரணைகள் மூலமும், சாட்சிகள் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அப்போது வன்னி 2-11 பிரிகேட்டின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய டொன் மனுவல்கே தீபால் அல்விஸ் 2004.06.15 ஆம் திகதி இந்த வழக்குத் தொடர்பாக சாட்சியம் அளிக்கும்போது -

இந்த நபரை நாம் கைதுசெய்யவில்லை என்றும் எனினும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் கைதுசெய்ததாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கை மூலம் அறிந்துகொண்டதாகவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமானது அப்போது இராணுவத்தோடு இணைந்து செயற்பட்ட இயக்கமாகும். அத்துடன் அவர்களிடம் ஆயுதங்களும் இருந்தன. அவர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடனும், இராணுவத்தின் அனுமதியுடனும் தான் ஆயுதம் வைத்திருக்கமுடியும். மேற்படி இளைஞன் கைதாகி ஜோசப் முகாமில் வைத்திருந்ததைக் கண்டதாக, சாட்சி ஒருவர் சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தால் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டிருப்பதை அறிந்ததும், அதற்குப் பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தும் நடவடிக்கை எடுக்காதது கண்டனத்துக்குரியது என்றும் சாட்சியங்களின் அடிப்படையிலும் விசாரணைகளின் அடிப்படையிலும் இந்தக் காணாமற்போன சம்பவத்திற்குப் பிரதான காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் இருப்பதாகவும், இந்த வழக்குக்குரிய தீர்ப்பை வழங்குமாறு நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

# ஹெல உறுமயவுடன் ரணில் சந்தித்துப் பேச்சு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த உடுவே தம்மலோக தேரரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகம் அமைந்துள்ள அசப்புவவில் இந்த விசேட சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

சபாநாயகருக்கு எதிராக, ஆளும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள நம்பிக்கைகயில்லாப் பிரேரணை குறித்தே இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டதாகவும் தெரிகிறது.

அரசினால் கொண்டுவரப்படவுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரரேரணைக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு அளிக்கக்கூடாது என, இந்தச் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடுவே தம்மலோக தேரரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது.

# மின்சாரசபை தலைவர் குடாநாட்டுக்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபைத் தலைவர் ஆனந்த குணசேகர, நேற்று யாழ்.குடாநாட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருந்தார்.

இவர், நேற்றுக்காலை - விமானம் மூலம் பலாலி விமானப்படைத் தளத்திற்கு வந்திறங்கி, அங்கிருந்து சுன்னாகத்திலுள்ள யாழ். பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சென்று, யாழ்.குடா நாட்டின் மின்விநியோகம் தொடர்பாகக் கலந்துரையாடினார். காலை 11.00 மணியளவில் வட பிராந்திய மின்சாரசபை அலுவலகத்திற்கு சென்று அங்கு நடைபெற்ற நவராத்திரி நிகழ்வில் கலந்துகொண்டதுடன், பணியாளர்களுடனும் கலந்துரையாடினார்.

பின்னர் யாழ்.செயலகத்திற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளுடன் மின்சார சபை தொடர்பாக கலந்துரையாடினார்.

இவரின் விஜயத்தின் நோக்கம் - யாழ். குடாநாட்டுற்கு லக்ஷபான நீர்மின்சாரத்தைக் குடாநாட்டுக்குக் கொண்டு வரமுடியுமா என ஆராய்வதற்கே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய முன்னாள் பொலிஸ்காரர் மீது வவுனியா நீதிமன்றில் மனு

(வவுனியா)

வவுனியா மாமடுவ பகுதியைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் - 14 வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் புரிந்து, அந்தச் சிறுமிக்குப் பிள்ளை பிறந்திருப்பதாக, வவுனியா நீதிமன்றில் - வவுனியா சிறுவர், பெண்கள் பாதுகாப்புப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தச் சிறுமியை, செட்டிக்குளம் பிரதேசத்தில் இருந்து வீட்டுப் பணிக்காக அழைத்துச் சென்று, தேனீருக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் பலாத்காரம் புரிந்ததாகவும், இவ்வாறு பலமுறை பலாத்காரம் புரியப்பட்டு பின்னர் இந்தச் சிறுமியை வீட்டில் சேர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தச் சிறுமிக்குக் குழந்தையொன்று பிறந்திருப்பதாக, வவுனியா பொலிஸ் சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு, வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நபர் பொலிஸ் உத்தியோகத்தராக வவுனியாவில் கடமையாற்றியிருந்தார் என்பதும், தற்போது அவர் சேவையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்துக்கு இடையூறான காவலரண்களை மாற்ற இணக்கம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் காவலரண்களை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட பகுதி இராணுவ அதிகாரிகள் மூலம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக, யாழ்.குடாநாட்டுக்கான கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில்தொன்னக்கோன் தெரிவித்தார்.

நேற்று யாழ்நீதிமன்றத்தில் மேஜர் ஜெனரல் தென்னக்கோன், யாழ் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் யாழ் நீதிமன்ற எல்லைக்குள் உள்ள இராணுவபொறுப்பதிகாரி, பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகள், யாழ் நீதிவான் விக்னராஜா ஆகியோருக்கிடையேயான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக உரிய பொறுப்பதிகாரியுடன் மாநகரசபை ஆணையாளரைத் தொடர்புகொள்ளுமாறும், அதற்கான நடவடிக்கைகளை படையதிகாரிகள் மேற்கொள்ளுவர் என்றும் அதிலும் ஏதேனும் பிணக்குகள் இருப்பின் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறும் அந்தப் பிரச்சினையை தான் அணுகுவதாகவும் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

# இந்தியா செல்ல முயன்ற மூவர் மன்னாரில் கைது

(மன்னார்)

இந்தியாவிற்கு செல்வதற்காக மன்னார் உறுமலைக் கடற்கரைப் பகுதியில் நின்ற மூன்று தமிழர்களை, அப்பகுதியால் ரோந்து வந்த கடற்படையினர் கைது செய்துள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை இந்தக் கைதுச் சம்பவம் இடம்பெற்றது. இதன்போது லட்சுமி, மெபுதாசன் மற்றும் சின்னராஜா ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்

இவர்கள் மூவரும் இந்தியாவுக்கு செல்வதற்காகப் படகினை எதிர்பார்த்திருந்ததாக, படையினரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் இந்த மூவரும் தலைமன்னார் பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

# 3 பிள்ளைகளின் தாயாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கிறிஸ்தவ போதகர் மீது வழக்கு!

(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவுப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ போதகர் ஒருவர் - மூன்று பிள்ளைகளின் தாயார் ஒருவரைப் பாலியல் பலாத்காரம் புரிந்திருப்பதாக, வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ள னர்.

இந்தப் பெண் தனக்கு நடந்தவற்றை வவுனியா நீதிமன்றத்தில் நீதிவானுக்கு முன்னால் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி பெண்ணின் கணவன் வெளிநாட்டில் இருப்பதாகவும், விடத்தல் தீவுப் பகுதியில் மேற்படி பாதிரியாருக்குக் கீழ் பணியாற்றி வந்தபோது, தன்னைத் திருமணம் செய்வதாகக் கூறித் பாலியல் பலாத்காரம் புரிந்ததாகவும், தற்போது தான் இரண்டு மாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் அந்தப் பெண் நீதிவானுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு 01.12.2004 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அடுத்த வாரம்...

திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக ஜப்பான் தூதரகம் அறிவித்துள்ளது.

ஒரு வாரகாலத்திற்கு இலங்கையில் தங்கியிருக்கும் அகாஷி சமாதான நடவடிக்கைகளின் தற்போதய நிலைமைகுறித்து அரசாங்கத்தரப்பினருடனும் பேச்சுகளை நடாத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகள் ஆபத்தான சிக்கல் நிலையில் அமைந்துள்ளதாக அண்மையில் யசூசி அகாசி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வே மூலமாக...

பதில்கள் கருத்துக்கள் என்று தான் கொள்ளவேண்டும்.

ஒரு விதத்தில் பார்க்கப்போனால் அரசின் பதில் கருத்துக்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை. இது அரசின் வல்லுநர்களுக்கிடையில் நடந்த விவாதங்களின் ஆவணம் - அவ்வளவுதான். புலிகளின் பிரேரணைகள் அவர்களுக்குரிய முக்கியத்துவத்துடன் சரியாகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது என்ற ரீதியில் ஆக்கபூர்வமகவும் நேர்மறையாகவும் பார்க்கவேண்டும்.

பேச்சுக்களை எப்போது தொடர்வது என்ற காலவரையறை பற்றி யோசிக்க விரும்பவில்லை. இம் மாதிரியான காலவரைபுகள் பற்றி பேசுவது பெரிதும் உதவியாக இருக்காது.

மேலும் அவை எதிர்காலத்தைப் பற்றி இருப்பதால் இதுவெல்லாம் கடைப்பிடிக்கக்கூடியவை அல்ல. இதில் நோர்வே அனுசரணையாளர்களின் உதவியுடன் நாங்கள் விடுதலைப்புலிகளுடன் எங்களுக்குள்ள கருத்து வேறுபாடு இடைவெளியை குறைக்கப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

விடுதலைப் புலிகள் அப்போதைய அரசுடன் கடந்த ஆண்டு பேச்சுவார்த்தை முறிந்ததற்கு நியாயமான காரணங்கள் இருக்கலாம். அவைகள் என்ன என்று பார்த்து அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேணடும். நின்றுபோன பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவது என்பது எளிதான காரியமல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க...

ஒருவாரகாலமாக இலங்கையில் தங்கியிருந்த மேஜர் ஜெனரல் கார்ல் டபிள்யூ எயிட்கன் பெரியே இங்குள்ள அரச உயர்மட்டத்தலைவர்கள், இராணுவ கடற்படை, விமானப்படை அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

நாட்டின் பாதுகாப்பு குறித்த முக்கிய கலந்துரையாடல்களை நடத்திய அமெரிக்கப் படைத்தளபதி நாட்டில் பல்வேறு படைத்தளங்களுக்கும் விஜயம் செய்து பாதுகாப்பு நிலவரங்களை நேரில் மதிப்பிட்டதாகவும் தெரியவருகிறது.

நேற்று விஜயத்தை முடித்துக் கொண்டு மேஜர் ஜெனரல் எயிட்கன் பெரியே அமெரிக்கா திரும்பியதை, அமெரிக்க தூதரகம் உறுதிப்படுத்தியது.

## பேச்சுக்களை..

படுத்திய கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ் லோங் - அவரது விஜயத்துக் கான திகதி இன்னமும் திட்டமிடப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆர்மிரேஜ் தனது கொழும்பு விஜயத்தின்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களுடன் சமாதான முயற்சிகள் குறித்து விரிவாகப் பேச்சுக்களை நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

பணிநிலை வெற்றிடம்

அலுவலக செய்தியாளர்கள்

'நமது ஈழநாடு' பத்திரிகையின் அலுவலக செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 2004. 10.27 புதன்கிழமை காலை 10 மணிக்கு - கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

கல்வித் தகைமை - க.பொ.த (உயர்தரம்)

கிளிநொச்சியில் எமது அலுவலக செய்தியாளராகப் பணிபுரிய விரும்புவோரும் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.